METHODIST CHURCH

PRAYER AND SERVICE BOOK

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

மெதொடிஸ்த சபையாரின்

தேவாராதனை ஒழுங்கு

31790

American Ceylon Mission Press,

Tellippalai

1935.

O. S. M. ALI
BOOK SELLERS
66-3, AWWALZAVIA RD.,
GRANDPASS
COLOMBO - 01400

பொருள் அட்டவணை

பக்கம்.

1.	முக்கிய கவனிப்பு	1
2.	இராப்போசன ஒய்வுநாள் ஆராதனை ஒழுங்கு	3
3.	ஒய்வுநாள் ஆராதனை இரண்டாம் ஒழுங்கு	23
4.	,, ,, மூன்றும் ஒழுங்கு	33
5.	,, ,, நான்காம் ஒழுங்கு	42
6.	சங்கீதங்கள் வாசிக்கப்படும் கிரமம்	52
7.	விசேஷ செபங்கள்	56
8.	,, ஸ்தோத்திரங்கள்	71
9.	குழந்தைகளுக்குக்கொடுக்கும் ஞானஸ்நான முறைமை	74
10.	வளர்ந்தவர்களுக்குக்கொடுக்கும் ஞானஸ்நான முறைமை.	82

முக்கிய கவனிப்பு

ஆராதனைக்கு வருவோர் செப வேளையாயிருந்தால், வாசலில் நின்று செபம் முடிந்தபின் பிரவேசிப்பது நன்று. தங்கள் கைகளில் செபப் புஸ்தகம், பாட்டுப் புஸ்தகம், வேதம் வைத்திருப்பது நல்லது. செபவேளையில் ஆசனங்களிலிருப்பதைப் பார்க்கிலும், பயபக்தியோடு நிற்றல் அல்லது முழந்தாளில் இருத்தலே வேதாகம ஒழுங்கென்பதை மறந்துபோகவேண்டாம். ஆராதனை நடத்தும் குருவானவரோடு சேர்ந்தும் தனித்தும் வாசிக்கும்படி நியமிக்கப்பட்ட பாகங்களைக் கருத்தோடு வாசிக்கவும்.

ஆராதனை நடத்துபவர், குறிக்கப்பட்ட நாலு ஆராதனை ஒழுங்குகளையும் இராப்போசனக் கிழமை தொடக்கமாய் முறையே கைக்கொள்ளல் வேண்டும். மாசத்தின் ஐந்தாம் கிழமையில், தாம் விரும்பிய பிரகாரமாவது அல்லது இவ்வொழுங்குகளில் ஒன்றைத் தெரிந்தாவது ஆராதனை நடத்தலாம். சபையார் விளங்கவும், சேர்ந்து வாசிக்கவும் கூடிய பிரகாரம் தெளிவாயும் பதமையாயும் வாசிக்கக்கடவர்.

அந்தந்த ஓய்வுநாளுக்கென்று நியமிக்கப்பட்ட சங்கீத வசனங்களைக் குருவானவரும் சபையாரும் மாறி மாறி வாசிக்க அல்லது பாட வேண்டும்.

செபப் புஸ்தகத்திலுள்ள Magnificat Benedictus முதலியவைகளைத் தாம் விரும்பியவேளை சங்கீதத்துக்குப் பதிலாகத் தெரிந்துகொள்ளலாம்.

மாகாண சங்கத்தால் நியமிக்கப்பட்ட புஸ்தகத்திலுள்ள தேவாரங்களையே ஆராதனைவேளையில் உபயோகிக்கலாம்.

இராப்போசன ஓய்வுநாள்

ஆராதனை ஒழுங்கு.

*கீதம் அல்லது கீர்த்தனை அல்லது தேவாரம்.

*குருவானவர்: ஜெபம் செய்வோமாக.

எல்லா இருதயங்களையும் கண்டு அவ்வவற்றின் விருப்பங்களனைத்தையும் அறிந்திருக்கிற சருவ வல்லமையுள்ள பிதாவே, உமக்கு மறைபொருளாயிருப்பது ஒன்றுமில்லை. நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது திருநாமத்தை யோக்கியமாய்த் துதிக்கவும், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலைக் கொண்டு எங்கள் இருதய சிந்தனைகளைச் சுத்திகரித்தருளும். ஆமென்.

*எல்லாரும்:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராச்சியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

*எல்லாரும் எழுந்துநிற்கப் பத்துக் கற்பனைகளின் சுருக்கம் வாசிக்கப்படவேண்டியது:—

குரு :—கடவுள் சொல்லிய வார்த்தைகளாவன:— உன் ஆண்டவராகிய கடவுள் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—நீ உனக்குயாதொரு விக்கிரகத்தையாவது சொரூபத்தையாவது உண்டாக்கவும், அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—உன் ஆண்டவராகிய கடவுளின் நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கநினைப்பாயாக.

சபை :—ஆண்டவரேஎங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—உன் தகப்பனையும் தாயையுங்கனம்பண்ணுவாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்குஇரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—கொலை செய்யாதிருப்பாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—விபசாரஞ்செய்யாதிருப்பாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—களவுசெய்யாதிருப்பாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—பிறனுக்குரியவைகளை இச்சியாதிருப்பாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு :—இயேசுபெருமான் உபதேசித்துச் சொன்னதாவது:— உன் ஆண்டவராகிய கடவுளிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக; உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.

சபை :—ஆண்டவரே எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும், எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

*குரு :—பாவ அறிக்கை செய்வோமாக.

எல்லாரும் :—சருவ வல்லமையுள்ள கடவுளே, எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவே, சகலத்தையுஞ் சிருஷ்டித்தவரே, சகல மனுஷருக்கும் நியாயாதிபதியே, தேவரீர் எங்களை நியாயத்தோடே கோபித்து முனியும்படி, நாங்கள் உமது தேவ மகத்துவத்துக்கு விரோதமாக, மனோ வாக்குக் காயங்களினாலே, அடிக்கடி கொடிதாய்ச் செய்த மிகுதியான பாவங்களையுந் தீமைகளையும் உணர்ந்து சொல்லி, இவைகளின் நிமித்தம் துக்கித்துப் புலம்புகிறோம். நாங்கள் செய்த அக்கிரமங்களை நினைந்து வியாகுலப்பட்டு, மனப்பூர்வமாய்த் துக்கித்து, மிகவும் விசாரமாய் மனஸ்தாபப்படுகிறோம். மகா இரக்கமுள்ள பிதாவே, எங்களுக்கு இரங்

கும், இரங்கும்; எங்கள் ஆண்டவரும் உமது குமாரனுமாகிய இயேசுக்கிறிஸ்துவின் நிமித்தம் முன் செய்தவைகள் எல்லாவற்றையும் மன்னித்தருளும். நாங்கள் இனி எப்பொழுதும் உமது நாமத்தின் மகிமைப் பிரதாபம் விளங்கும்படி புதிய சீவ மார்க்கத்தில் நடந்து உம்மைச் சேவித்து உமக்குப் பிரியமுள்ளவர்களாய் இருக்கும்பொருட்டு எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நிமித்தம் அநுக்கிரகித்தருளும். ஆமென்.

*குரு:—உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, மெய் விசுவாசத்தோடே உம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும் பாவ மன்னிப்பைத் தருவேன் என்று மிகுந்த இரக்கத்தினால் வாக்குத்தத்தஞ் செய்தருளிய எங்கள் பரம பிதாவாகிய சருவவல்லமையுள்ள கடவுளே, தேவரீர் எங்களுக்கிரங்கி, ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துமூலமாய் எங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்து, அவைகளினின்று எங்களை விடுவித்து, சகல நற்குணங்களிலும் எங்களை நிலைப்படுத்தி, திடமாக்கி, நித்திய சீவனைப் பெறும்படி எங்களை நடத்தியருளும் ஆமென்.

வேதப்பாடம்

இப்பொழுது எல்லாரும் எழுந்துநின்று "நைசீன்" விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லவேண்டும்.

வானத்தையும் பூமியையும், காணப்படுவதும் காணப்படாததுமான சகலத்தையும் சிருட்டித்த சருவவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே கடவுளை நான் விசுவாசிக்கிறேன். ஒரே ஆண்டவரும், பிதாவுமாகிய கடவுளுடைய ஒரேபேறான குமாரனுமா

கிய இயேசுக்கிறிஸ்துவைவிசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன் தமது பிதாவினாலே செனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமாகவும், சோதியில் சோதியாகவும் மெய்த் தெய்வத்தில் மெய்த் தெய்வமாகவும், உண்டாக்கப் பட்டவரல்ல, செனிப்பிக்கப்பட்டவர்; பிதாவோடே ஒரே தன்மையுடையவர். சகலத்தையும் சிருட்டித்தவர். மனிதராகிய நமக்காகவும், நமக்கு இரட்சிப்பு உண்டாக்கவும் அவர் பரமண்டலத்தில் இருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளிடத்தில் உற்பவித்து, மனிதனாகி, நமக்காய்ப் பொந்தியுபிலாத்துவின் அதிகார காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடனுபவித்து அடக்கம் பண்ணப்பட்டார். வேத வாக்கியங்களின்படி அவர் மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார். அவர் பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவர் உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயம்தீர்க்கும்படி மகிமையோடு திரும்ப வருவார். அவருடைய இராச்சியத்துக்கு முடிவில்லை

சீவனுக்குக் கர்த்தரும் அதைக் கொடுக்கிறவருமாகிய பரிசுத்த ஆவியை விசுவாசிக்கிறேன்; அவர் பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவர்; அவர் பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழப்படுகிறவரும் ஸ்தோத்திரிக்கப்படுகிறவருமாய் இருக்கிறார். அவர் தீர்க்கதரிசிகளைக்கொண்டு பேசினார். ஒரே சாதாரண அப்போஸ்தல சபையுண்டென்றும் விசுவாசிக்கிறேன். பாவ மன்னிப்புக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தையும் அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய சீவனும் வருமென்று காத்திருக்கிறேன். ஆமென்.

விசுவாசப் பிரமாணத்துக்குப் பதிலாக Te Deum என்ற பாட்டுப்பாடலாம் அல்லது வாசிக்கப்படலாம்.

கடவுளே, உம்மைத் துதிக்கிறோம்; நீரே கர்த்தரென்று நாங்கள் மதிக்கிறோம்.

நித்திய பிதாவாகிய உம்மைப் பூமண்டலம் எல்லாம் வணங்கும்.

தேவதூதர் யாவரும், பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரிகளும்,

கெருபியரும், சேராபியரும் உம்மைநோக்கி ஒழிவின்றி முழக்கமிட்டு,

சேனைபதியும், ஆண்டவருமாயிருக்கிற கடவுள் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்றும்,

வானமும் பூமியும் மகத்துவஞ் சிறந்த உமது மகிமையினால் நிறைந்திருக்கின்றன என்றும், உரத்த சத்தத்துடன் உம்மைத் துதிக்கிறார்கள்.

அப்போஸ்தலருடைய மாட்சிமை பொருந்திய கூட்டம் உம்மைப் போற்றும்.

தீர்க்கதரிசிகளின் கனம்பொருந்திய சங்கம் உம்மைப் போற்றும்.

இரத்தச்சாட்சிகளாகிய மேன்மைபொருந்திய சேனை உம்மைப் போற்றும்.

அளவற்ற மகத்துவமுள்ள பிதாவாகிய நீரும், துதிபெற்ற உமது ஏகசத்திய சுதனும், தேற்றுகிறவராகிய பரிசுத்த ஆவியும் உண்டென்றும்,

பூமண்டலத்தில் எங்குமுள்ள திருச்சபையார் யாவரும் அறிக்கையிடுகிறார்கள்.

கிறிஸ்துவே தேவரீர் மகிமையின் இராசா;

நீரே பிதாவுடைய நித்திய சுதன்.

நீர் மனுஷரை இரட்சிக்க ஏற்பட்டபொழுது, கன்னியானவளின் கருப்பத்தை அரோசிக்கவில்லை.

நீர் மரணவேதனையைச் செயித்து, விசுவாசிகள் அனைவருக்கும் வானராச்சியத்தைத் திறந்தருளினீர்.

நீர் பிதாவின் மகிமையிலே கடவுளுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

நீர் இனி எங்களுக்கு நியாயாதிபதியாக வருவீரென்று விசுவாசிக்கிறோம்.

ஆதலால், நீர் உம்முடைய விலையுயர்ந்த இரத்தத்தினால் மீட்டுக்கொண்ட உமதடியாருக்கு உதவி செய்யும்படி, உம்மை வேண்டுகிறோம்.

அவர்களை நித்திய மகிமையிலே உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்தருளும்.

ஆண்டவரே, உமக்குரிய சனங்களை இரட்சியும். உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

அவர்களை ஆண்டு, சதாகாலமும் உயர்த்தியருளும்.

தினந் தினம் உம்மை வாழ்த்துகிறோம்.

எப்பொழுதும், சதாகாலங்களிலும், உமது திருநாமத்தை வணங்குகிறோம்.

ஆண்டவரே, இந்நாளில் நாங்கள் பாவஞ் செய்யாமல் எங்களைக் காத்தருளும்.

ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்; எங்களுக்கு இரங்கும்,

ஆண்டவரே, நாங்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்; அதுபோல நீரும் எங்கள் மேல் இரக்கம்வைத்தருளும்.

ஆண்டவரே, உம்மையே நம்பியிருக்கிறோம்; நாம் ஒருபொழுதுங் கலங்காதபடி அருள் செய்யும்.

கீதம் அல்லது கீர்த்தனை.

குருவானவர் :—செபம் செய்வோமாக.

எல்லாரும்:—

என்றென்றும் சீவித்திருக்கிற சருவ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் சகல மனிதருக்காகவும் பிரார்த்திக்க வேண்டுமென்று கட்டளையிட்டீர். நாங்கள் செய்கிற இந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். சத்தியத்திலும் ஐக்கியத்திலும் சருவ சபையாரும் வளரும்படி அவர்களை ஆவியினால் ஏவியருளும். உமது திருநாமத்தை விசுவாசித்து அறிக்கைசெய்கிற யாவரும், உம்முடைய பரிசுத்த வாக்கின் சத்தியத்திலே பேதமின்றி ஒருமித்து வாழக் கிருபைசெய்தருளும். இந்தச் சபையாரும் உமக்குரிய சகல சனங்களும் தங்கள் ஆயுள்பரியந்தம் பரிசுத்தத்திலும் நீதியிலும் உண்மையாய் உமக்குத் தொண்டுசெய்யக் கிருபை ஈந்தருளும். கர்த்தாவே துன்பம், துக்கம், தரித்திரம் முதலிய உபத்திரவங்களில் அழுந்தியிருக்கிற யாவரையும், தேற்றிச் சகாயம் செய்தருளும். இச்சீவியத்தை விட்டு மறுமைக்குச் சென்ற உமக்குரிய பக்தர்களை நினைந்து, உமது திருநாமத்தை துதிக்கிறோம். நாங்களும் அவர் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி, பரம இராச்சியத்துக்குச் சுதந்தரர் ஆகும்படி கிருபைசெய்தருளும். பிதாவே எங்கள்

ஒரே மத்தியஸ்தராகிய யேசுகிறிஸ்துவினிமித்தம் இப்படிச் செய்தருளும். ஆமென்.

விசேஷ செபங்களும் ஸ்தோத்திரங்களும் தேவைக்குத்தக்கபடி தெரிந்துகொள்ளலாம்.

இப்பொழுது விஸம்பரஞ் சொல்லப்படும். அதன் பின் காணிக்கை சேர்க்கப்படும். காணிக்கை பீடத்தில் வைக்கும்போது குருவானவர் செபம் செய்யக்கடவர்.

கீதம் அல்லது கீர்த்தனை.

செபம்.

பிரசங்கம்.

கீதம் அல்லது கீர்த்தனை.

குருவானவர்:—

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், பிதாவாகிய கடவுளுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

———

கர்த்தருடைய இராப்போசனம்.

பீடமானது சுத்தமான வெண் வஸ்திரத்தால் மூடப்பட்டதாய் வசதியான இடத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

கர்த்தருடைய இராப்போசனத்தைத் தனிமையாய்ப் பரிமாறும் நேரத்தில் * இவைகள் வாசிக்கப்படும்.

தற்சன பிரார்த்தனை அல்லது மௌனப் பிரார்த்தனை செய்யப்படலாம்

வறியவர்களுக்கென்று காணிக்கை சேர்க்கப்படும்.

குரு :—உங்கள் கிரியையையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்துக்காகக் காண்பித்த அன்பையும், பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குக் கடவுள் அநீதி உள்ளவரல்லவே. (எபி. 6 : 10)

சகேயு நின்று கர்த்தரை நோக்கி, ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினது உண்டானால் நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். (லூக். 19 : 8)

நமக்குக் கிடைக்கும் சமயத்துக்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக் கடவோம். (கலாத் 6 : 10)

ஒருவன் இவ்வுலக ஆஸ்தியை உடையவனாய் இருந்து, தன் சகோதரனுக்குக்

குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருத யத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிற தெப்படி? (1 யோவா. 3: 17)

ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும் சரீரத்துக்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோசனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாய் இருக்கும். (யாக். 2: 15–17)

குருவானவர் சபையோரை நோக்கிச் சொல்லவேண்டியது.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே, இந்த அப்பத்தைப் புசிக்கவும் இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணவும் வருகிற யாவரும், தங்களை நன்றாய்ச் சோதித்தறிந்து சேரவேண்டுமென்று பரிசுத்த பவுல் புத்தி சொன்னதை, நம்முடைய இரட்சகராகிய கிறீஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய பரிசுத்த நற்கருணைப் பந்தியிற் சேர மனதாயிருக்கிற நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டும். சகோதரரே, ஆண்டவராலே ஆக்கினைத் தீர்ப்பு அடையாதபடிக்கு, நீங்களே உங்களைப் பரிசோதித்து உங்கள் பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, நம்முடைய இரட்சகராகிய கிறீஸ்துவை உயிரும் உறுதியுமுள்ள விசுவாசத்தினாலே பற்றிக் கொண்டு, உங்

கள் நடத்தையைச் சீர்திருத்தி, எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருங்கள். இப்படிச் செய்தால், இந்தப் பரிசுத்த நற்கருணையைப் பெற்றுக்கொள்ளப் பாத்திரரா யிருப்பீர்கள்.

நம்முடைய சற்குருவும் ஏக இரட்சகருமாகிய இயேசுகிறீஸ்து நமக்காக மரணமடைந்ததினால் வெளிப்படுத்திய ஒப்பில்லாத அன்பைநாம் எப்பொழுதும் நினைக்கும்படி தமது மரணத்துக்கு என்றுமுள்ள நினைவு கூருதலாகப் பரிசுத்த நற்கருணையை நியமித்திருக்கிறார். ஆகையால் அவருக்கும் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செலுத்தி அவருடைய சித்தத்திற்கு முற்றும் கீழ்ப்படிந்து நமது வாழ்நாளெல்லாம் மெய்யான பரிசுத்தத்தோடும் நீதியோடும் அவருக்கு முன் ஊழியஞ் செய்யக் கருத்துடையவர்களாய் இருக்கக் கடவோம்.

ஆகையால் உண்மையும் பயபக்தியும் உடையவர்களாய் உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுப் பிறரோடே அன்பும் தயையும் உள்ளவர்களாகிக் கட்டளைக்கு அமைந்து, அவர் விதித்த நன்னெறிகளில் இனி நடந்து, புதிய சீவமார்க்கத்திலே செல்ல விரும்புகிற நீங்கள், சாந்த குணம் உள்ளவர்களாய் உங்கள் இருதயங்களை ஆயத்தப் படுத்தி, உங்களுக்கு ஆறுதலுண்டாக இந்தப் பரிசுத்த நற்கருணையைப் பெறும் பொருட்டு விசுவாசத்தோடே சமீபித்து வாருங்கள்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

மௌனப் பிரார்த்தனை செய்வோமாக.

நூலகம்

சபையார் எல்லாரும் நிற்க குருவானவர் சொல்லவேண்டியது

உண்மையாகவே தம்மிடத்திற்கு மனந் திரும்புகிற யாவருக்கும் ஆறுதலுண்டாக, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சொல்லியிருக்கிற வாக்கியங்களைக் கேளுங்கள்:—

வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்: (மத். 11: 28)

கடவுள் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான். 3: 16)

பரிசுத்தவானாகிய பவுல் சொல்லியிருக்கிறதையுங் கேளுங்கள்:—

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை, உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது. (1 தீ. 1: 15)

பரிசுத்தவானாகிய யோவான் சொல்லியிருக்கிறதையுங் கேளுங்கள்:—

ஒருவன் பாவஞ் செய்வானானால், நீதிபரராயிருக்கிற இயேசுகிறீஸ்து, நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. (1 யோவான். 2: 1, 2)

குரு:—உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

சபை:—அப்படியே எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில உயர்த்துகிறோம்.

குரு:—நம்முடைய கர்த்தராகிய கடவுளுக்கு நாம் ஸ்தோத்திரங்களைச் செலுத்தக் கடவோம்.

சபை:—அப்படிச் செய்வதே தகுதியும் நீதியுமாயிருக்கின்றது.

குரு:—ஆண்டவரே, பரிசுத்த பிதாவே, சருவ வல்லமையுள்ள நித்திய கடவுளே, நாங்கள் எல்லாக் காலங்களிலும் எவ்விடங்களிலும் உமக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துவதே மிகவுந் தகுதியும், நீதியும் நாங்கள் செய்ய வேண்டிய பிரதான கடமையுமாயிருக்கிறது.

எல்லாரும்

ஆதலால் தேவதூதரோடும், அவர்களில் சிரேஷ்டரோடும், வானத்திலுள்ள சங்கத்தாரனைவரோடும், எப்பொழுதும் உம்மைப் போற்றி, சேனைபதியும், கடவுளுமாகிய ஆண்டவரே, நீரே பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். வானமும் பூமியும் உமது மகிமையினால் நிறைந்திருக்கின்றனவென்று சொல்லி மேன்மை பொருந்திய உமது நாமத்தைத் துதித்து வணங்குகிறோம். சருவத்துக்கும் மேலான ஆண்டவரே உமக்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.

குருவானவர்: செபம் பண்ணுவோமாக.

இரக்கமுள்ள ஆண்டவரே, உமது எண்ணிறந்த மகா இரக்கங்களை நம்பி, உம்முடைய பீடத்துக்குச் சமீபிக்கத் துணிகிறோமேயல்லாமல் நாங்கள் சுயமாய் நீதிமான்களென்று நம்பிவரவில்லை. நாங்கள் உம்முடைய பீடத்தின்கீழ் விழும் சேஷத்தையாகிலும் பொறுக்கிக் கொள்

வதற்குப் பாத்திரவான்களல்ல. ஆகிலும் தேவரீர் எப்பொழுதும் அருள் பாராட்டும் இயல்புடைய ஆண்டவராயிருக்கிறீர். ஆனதன்மையினால் காருண்ணிய கர்த்தாவே எங்கள் பாவமுள்ள சரீரங்கள் உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறீஸ்துவின் சரீரத்தினாலே சுத்தமாகி, எங்கள் ஆத்துமாவும் விலை உயர்ந்த அவருடைய இரத்தத்தினாற் கழுவப்படுவதற்கு அவரிடத்தில் நாங்களும் எங்களிடத்தில் அவரும் எப்பொழுதும் வாசமாயிருப்பதற்கும் ஏற்றவிதமாய் இந்தப் பரிசுத்த நற்கருணையில் பங்குபெற எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

எங்கள் பரமபிதாவாகிய சருவ வல்லமையுள்ள கடவுளே, எங்களை மீட்கும் பொருட்டுச் சிலுவையின் மரணத்தை அனுபவிக்கும்படி, உருக்கமான இரக்கத்தினால் உமது ஒரே குமாரனாகிய இயேசுகிறீஸ்துவைத் தந்தருளினீர். அவர் அச்சிலுவையினிடத்தில் ஒரே தரம் தம்மைத் தாமே பலியாக ஒப்பித்ததினால், சருவ லோகத்தாருடைய பாவங்களையும் விமோசனம் செய்யும் பொருட்டு, நிறைவும் சம்பூரணமுமுள்ள குறைவில்லாத ஒரு பலியையும் பிராயச்சித்தத்தையும் நிறைவேற்றினார். தாம் திரும்ப வருமளவும் தம்முடைய விலையுயர்ந்த அருமையான மரணத்தை நினைப்பதற்கேதுவாக ஒரு நியமத்தை ஏற்படுத்தி, அதை ஓயாமல் நாங்கள் கைக்கொள்ள வேண்டுமென்று தமது சுவிசேஷத்தில் விதித்தருளினார்.

அவர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டுச் சீஷருக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகப்

பிட்கம்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போசனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவ மன்னிப்புண்டாகும்படி உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; இதைப் பானம் பண்ணும்போதெல்லாம், என்னை நினைவு கூரும்படி, இதைச் செய்யுங்கள் என்று திருவுளம் பற்றினார்.

இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் மிகவும் தாழ்மையோடே உம்மை வேண்டிக் கொள்ளுகிறபடி தேவரீர் எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து உண்டு பண்ணின நியமப் பிரகாரமாக அவருடைய வேதனையையும் மரணத்தையும் நினைத்துக் கொள்ள, நாங்கள் இந்த அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் வாங்கி, பரிசுத்தம் பொருந்திய அவருடைய சரீரத்திலும் இரத்தத்திலும் பங்குள்ளவர்களாகும்படி தயை செய்தருளும். ஆமென்.

பின்பு குருவானவர் முன்னமே நற்கருணையில் இருவிதமான பதார்த்தங்களையும் வாங்கிக்கொண்டு, ஆராதனையை நடத்துங் குருமார் அங்கே இருந்தால், முன்பு அவர்களுக்குக் கொடுத்து, பின்பு சனங்களுக்குங் கிரமமாக அவைகளைக் கையிலே கொடுக்கக் கடவர்.

அப்பத்தைக் கொடுக்கும்பொழுது

அவர் சொல்ல வேண்டுவது:

உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம், உன்

சரீரமும் ஆத்துமாவும் நித்திய சீவனைப் பெறுவதற்கு அவைகளைத் தற்காக்கக் கடவது. கிறிஸ்து உனக்காக மரித்தார் என்பதை நினைக்கும் பொருட்டு, நீ இதை வாங்கிப் புசித்து, உன் இருதயத்திலே விசுவாசத்தினால் சந்தோஷத்தோடே அவரை ஆகாரமாக்கிக் கொள்.

பாத்திரத்தைக் கொடுக்கும்போது
குருவானவர் சொல்ல வேண்டுவது:

உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம், உன் சரீரமும் ஆத்துமாவும் நித்திய சீவனைப் பெறுவதற்கு அவைகளைத் தற்காக்கக் கடவது. கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகச் சிந்தப்பட்டதென்பதை நினைக்கும் பொருட்டு, நீ இதைக் குடித்து நன்றியறிந்தவனாயிரு.

எல்லாரும் ராப்போசன பதார்த்தங்களை வாங்கினபின்பு குருவானவர் கர்த்தருடைய பீடத்தைச் சமீபித்து அப்பத்திலும் திராட்ச ரசத்திலும் சேஷமானதை அதின்மேல் வைத்து வெண் வஸ்திரத்தால் மூடவேண்டும்

கீதம்.

குரு :—ஆண்டவரே, பரமபிதாவே, உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களும் மரணமுமாகிய இவைகளின் மூலமாக நாங்களும் உமக்குரிய சமஸ்த சபையாரும் அவருடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தைக் கொண்டு பாவவிமோசனத்தையும், அவர் அநுபவித்த வேதனையினால் வரும் சகல நன்மைகளையும் அடையும் பொருட்டுத் தயை செய்யவும், நாங்கள் நன்றியறிந்து செய்கிற ஸ்தோத்திரப் பலியை இரக்கத்

துடன் அங்கீகரிக்கவும் வேண்டுமென்று தாழ்மையுள்ள அடியாராகிய நாங்கள் பிதாவாகிய உம்மை மிகுந்த தாழ்மையோடே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆண்டவரே, நாங்கள் எங்கள் ஆத்துமாவையும் சரீரத்தையும் நியாயமும், பரிசுத்தமும், சீவனுமுள்ள பலியாக வைத்து, இப்பொழுதே உமக்கு ஒப்பித்து இந்த இராப்போசனத்துக்குப் பங்காளிகளாயிருக்கிற நாங்கள் அனைவரும் உமது கிருபையினாலும் பரம ஆசீர்வாதத்தினாலும் திருப்தி பெற வேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். பலவிதமான எங்கள் பாவங்களினால் ஏதாவதொரு நைவேத்தியத்தைச் செலுத்த நாங்கள் அபாத்திரராய் இருந்தும், தேவரீர் அதைப் பாராமல், எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக எங்கள் குற்றங்களை மன்னித்து, நாங்கள் செய்யவேண்டிய கடமையையும், பணிவிடையையும் அங்கீகரிக்க வேண்டுமென்று நாங்கள் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். சருவ வல்லமையுள்ள பிதாவே, அவராலும், அவரோடும் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் உமக்குச் சகல பெருமையும், மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்கக்கடவன. ஆமென்.

எல்லாரும் :—உன்னதத்திலே கடவுளுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேற் பிரியமும் உண்டாகக் கடவன. ஆண்டவராகிய கடவுளே, வானத்துக்கு இராசாவே, சருவ வல்லமையுள்ள பிதாவே, உம்மையே நாங்கள் துதிக்கிறோம், உம்மையே வாழ்த்துகிறோம், உம்மையே வணங்குகிறோம்; உமது

பிருந்த மகத்துவத்தை நினைத்து நாங்கள் உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். ஆண்டவரே, ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, உலகத்தின் பாவங்களை நிவாரணம் பண்ணுகிற பிதாவின் சுதனாகிய தேவஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்; உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் பிரார்த்தனையை அங்கீகரித்தருளும். பிதாவாகிய கடவுளுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே எங்களுக்கு இரங்கும். நீரே பரிசுத்தர், நீரே ஆண்டவராய் இருக்கிறீர்; கிறிஸ்துவே, நீரே பரிசுத்த ஆவியோடே பிதாவாகிய கடவுளுடைய மகிமையிலே மிகவும் உயர்ந்தவராய் இருக்கிறீர். ஆமென்.

குரு:—எல்லாப் புத்திக்கும் எட்டாத தெய்வசமாதானம், கடவுளையும் அவருடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகிற அறிவிலும், அவரைப் பற்றும் அன்பிலும், உங்கள் இருதயமும், சிந்தையும் நிலைத்திருக்கும்படி செய்யக்கடவது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய சருவ வல்லமை பொருந்திய கடவுளின் ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, உங்களோடே எப்பொழுதும் நிலைத்திருக்கக் கடவது. ஆமென்.

ஒய்வுநாள் ஆராதனை.

இரண்டாம் ஒழுங்கு.

குரு :—இது ஆண்டவர் கட்டளையிட்ட நாள்.

சபை :—இதிலே களிகூர்ந்து மகிழக் கடவோம்.

குரு :—நம்முடைய ஆண்டவராகிய கடவுளுக்கு நாம் ஸ்தோத்திரங்களைச் செலுத்தக்கடவோம்.

சபை :—அப்படிச் செய்வதே தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

குரு :—ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

சபை :—அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய துதியை விளங்கப் பண்ணும்.

கீதம் அல்லது கீர்த்தனை, அல்லது தேவாரம்.

எல்லாரும் நிற்கக் குருவானவர் சொல்ல வேண்டியது.

கர்த்தரைக் கண்டடையத் தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார். (எசா. 55: 6, 7)

நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையு முள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவராயு மிருக்கிறார். (யோவேல் 2 : 13).

மனந் திரும்புங்கள், பரலோக இராச்சியம் சமீபித்திருக்கிறது. (மத். 3 : 2)

இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று. ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக் கடவோம். (ரோ. 13: 12.)

குரு :—பாவ அறிக்கை செய்வோமாக.

எல்லாரும்.—சருவ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, நாங்கள் தப்பிப்போன ஆடுகளைப்போல, உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம்; எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும், விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உம்முடைய பரிசுத்த கட்டளைகளை மீறிக் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமலும் செய்யத் தகாதவைகளைச் செய்தும் வந்தோம்; எங்கள் உள்ளத்தில் சொஸ்தமேயில்லை. ஆனாலும் கடவுளே நீர் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதருக்கு அருளிச் செய்த வாக்குத் தத்தங்களின்படியே நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கிரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள மேல் பொறுமையா யிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச்

சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை யுண்டாகும்படி, நாங்களினித் தேவ பக்தியும் நீதியும் தெளிந்த புத்தியுமுள்ளவர்களாய் நடந்துவர இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

அல்லது

ஆசிரிய விருத்தம்.

1. அப்பனே சருவவல்ல ஐயனே கருணைக் குன்றே
தப்பின ஆடுபோலத் தவறினோம்வழியைவிட்டோம்
இப்புவி மனுடரொப்பஇதயமும்மனதுங்கெட்டோம்
செப்புநின்கற்பனைக்குச்செவிகொடாத்துஷ்டரந்தோ.

2. கண்ணினாற்செய்தபாவம் கணக்கில்லைக்கையாற்செய்த
எண்ணிலாப்பாவமெல்லாம்எப்படித்தொலைப்பதையோ
மண்ணிலும் மிகுதியாமே மனதினாற் செய்தபாவம்
நண்ணிடு நாவினாலே நவின்றவைக் களவு மின்றே.

3. தக்கவை செய்திடாமற் றகாதவை செய்து வந்தோம்
ஒக்கவே சுகமதில்லை உறுதிநும் வாக்கை நம்பி
மிக்கவே துணிந்துவந்தோம் மிரட்டியே துரத்திடாதீர்
துக்கமே ஒழித்துப் பாவந் துடைத்துச் சீராக்குவீரே.

4. தேவதா பக்திநீரேதெளிந்தநற் புத்தி கொண்டே
சீவநாள் முற்றுந் தூய்மை சிறந்துமே வாழச்செய்வீர்
மூவரிலொருவரான மூர்த்தியாம் யேசு மூலம்
ஆவலாய் வேண்டி நின்றோம் அருள்செய்வீர் ஆமெனு
மே (ன்)

குரு:—உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்

பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும் (ஏசா. 1: 18)

மகனே திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றும், நீதிமான்களையல்ல பாவிகளையே மனந் திரும்புகிறதற்கு அழைக்க வந்தேனென்றும் யேசு சொன்னார். (மத் 9: 2, 13)

கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், என்னைப் பாவம் மரண மென்பவற்றின் பிரமாணத்தினின்று விடுதலை யாக்கிற்றே. (ரோ 8:12)

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவி னிரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோ 1:7)

குருவானவர்

பராபரனே! பலவித கொடிய மோசங்களாற் சூழப்பட்டிருக்கிற நாங்கள், எங்கள் சுபாவ பலவீனத்தினாலே நிலை நிற்கத் திராணியற்றவர்கள் என்று அறிந்திருக்கிறீரே. எங்களை எல்லா மோசங்களிலும் தாங்கவும் எல்லாச் சோதனைகளிலும் நின்று கடைத்தேறவும் தக்க பெலனையும் ஆதரவையும் கட்டளையிட் டருளும்படி, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

எல்லாரும்

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக் குட்படப் பண்ணாமல், தீமையில் நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராச்சியமும்வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

அல்லது

1. பரமண்டலங்களில் வாழ்கின்ற பரனுமெங்கள் பிதாவே
பரிசுத்தப்படுவதாக, பழுதில் உந்தன் நாமம்.

2. வருவதாகஉந்தன்ராஜ்ஜியம்வானிற் செய்யும்முறையே,
திருவுள்ளத்தில் உதிக்கும் சித்தம்செய்வாராக புவிமேல்.

3. அன்றன்றுள்ள ஆகாரத்தை அளித்தீர் அடியார்க்கே
இன்றுந் தாவேண்டி நாமும் இரந்து பணிவோமே.

4. பொறுத்தே விடும் பொல்லாதார்நாம் புரிந்தபவக்கடனை
மறுக்காது நாம் மாற்றார்கடன் மன்னிப்பது போலே.

5. சூதனிடம் பவக் கண்ணியாம் சோதனைக்குட் சிக்கி
தீது செய்ய விடாமல் எம்மைச் சேமமாகக் காப்பீர்.

6 நிறை ராஜ்யம் வலிமையொடு நிகரிலாதும் மகிமை
குறையாமலே என்றென்றைக்கும் கொண்டே வாழும்
ஆமென்.

சங்கீதம் வாசிக்க அல்லது பாடப்படும்

முடிவில்

குரு:—ஆதியிலே பிதாவுக்கும், குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டானது போல,

சபை:—இப்பொழுதும், எப்பொழுதும், சதா காலமும் அப்படியே உண்டாவதாக. ஆமென்.

வேதபாடம்.

கீதம் அல்லது கீர்த்தனை

எல்லாரும் நிற்க சொல்ல வேண்டியது.

வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த சருவ வல்லமையுள்ள பிதாவாகிய கடவுளை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்து பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோர் ஸ்தானத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். பரலோகத்துக்கேறி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய கடவுளுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருவாரென்றும் விசுவாசிக்கிறேன்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். சாதாரண பரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவ மன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்றும் விசுவாசிக்கிறேன். ஆமென்.

அல்லது பாடவேண்டியது:

1. வானமும் பூமியும் வருமுறை படைத்த வல்லவரா மொருவர்—மேன்மை
ஆனகடவுளும் அன்புள்ள பிதாவும் அவரையே நம்பு வேனே.

2. இயேசுகிறிஸ்து ஏககுமாரன் இவர் நமதாண்டவராம்—முன்னாள்
மாசிலாக் கன்னி மரியிடம் பிறந்தார் ஆவியாலுற்ப வித்தார்.

3. பொந்தியுபிலாத்தின் அதிகாரகாலம் புகலரும் பாடு பட்டார்—பின்னும்
சிந்திடரத்தம சிலுவையி லறையுண்டு சீவனுந்தாமே விட்டார்.

4. பிரேதத்தை எடுத்துப் பிலவறை யொன்றில் பேணி யே காத்துவைக்க—அங்கே
திரேகத்தை விடுத்துச் சென்றார் பாதாளம் தினம் மூன்றிலே உயிர்த்தார்.

5. பரலோகம் சென்றார் பரனுடைவலப் பக்கம் பலத்த துடனேயிருந்தார்—ஓர்நாள்
நரராரேனு ரெவரையும் நடுத்தீர்க்க வருவதைநம்புவேன் நம்புவேனே.

6. பரிசுத்த ஆவி உண்டென்று நானும் பலமாக நம்புவே னே—மேலும்
பரிசுத்த திருச்சபை பரிசுத்தர் ஐக்கியம்பாவமன்னிப்பு முண்டே.

7. செத்தோர் உடம்பு சீவனைப் பெற்று திரும்ப எழும்பி விடும்—பின்னர்
நித்திய சீவனும்நீடூழிவாழ்வுண்டு நிசமிவைநம்புவேனே.

குருவானவர்: செபஞ் செய்வோமாக.

யாவரும் ஐக்கியமாயிருக்க விரும்புகிற சமாதான காரணராகிய கடவுளே, உம்மையறிவதே எங்களுக்கு நித்திய சீவன்; உம்மைச் சேவிப்பதே மெய்யான விடுதலை; நீர் எங்களைக் காப்பாற்றுவீரென்று நம்பி நிலைகொண்டு, எந்தவிரோதிகளின் வல்லமைக்கும் நாங்கள் பயப்படாதிருக்கும் பொருட்டு சத்துருக்களால் வரும் எல்லாத் தீங்குகளுக்கும் விலக்கி எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினதிகாரத்தினால் உமது தாழ்மையுள்ள அடியாராகிய எங்களைக் காத்துக் கொள்ளும். ஆமென்.

விசேஷசெபங்களும் ஸ்தோத்திரங்களும் தேவைக்குத் தக்கபடி தெரிந்து கொள்ளலாம்.

சர்தாரண ஸ்தோத்திரம்.

எல்லாரும்:—பரிபூரண தயவு நிறைந்த பிதாவாகிய சருவத்துக்கும் வல்ல கடவுளே, உம்முடைய அபாத்திரப் பணிவிடைக்காரராகிய எங்களுக்கும் மற்றனைவருக்கும்,

(விசேமாகத் தேவரீர் அதற்குமுன் அருளிச் செய்த உமது இரக்கங்களுக்காக இப்பொழுது நன்றியறிந்து ஸ்தோத்திரஞ் செய்ய வேண்டுமென்று இருக்கிறவர்களுக்கும்)

யாவராகிலும் பிரசித்தமாய் நன்றி செலுத்தும்டி கேட்டுக் கொண்டால் இவ்வசனத்தையுங் கூட்டிச் சொல்ல வேண்டும்.

தேவரீர் செய்த தயவுக்காகவும், திருவுள்ளத்தில் அன்பு கூர்ந்தருளிய எல்லா நன்மைக்காகவும், நாங்கள் உம்மைப் பணிந்து முழு இருதயத்

தோடும் உமக்கு நன்றிசெலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருட்டித்துக் காப்பாற்றுகிறதையும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் நினைந்து, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். மேலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாக, உலகத்தை மீட்டு இரட்சித்த உமது அளவிடப்படாத அன்பையும் கிருபையடைவதற்கான நியமங்களையும், மோட்ச நம்பிக்கையை எங்களுக்குத் தந்ததையும் உணர்ந்து உம்மை வாழ்த்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்து, முழுமனதோடும் உம்மைத் துதித்து, எங்களுடைய கிரியைகள் ஒவ்வொன்றினாலும் உமக்குத் தொண்டு செய்ய எங்களை ஏற்படுத்தி, நாங்கள் எங்கள் ஆயுள் முழுவதும் சுத்தமும் நீதியுமுடையவர்களாய் உமக்கு முன்பாக நாள்விடவும், வாக்கினால் மாத்திரமன்றி நடக்கையினாலும் உம்மைத துதிக்கவும், உமது இரக்கத்தைக் கண்டு உணரத்தக்க உணர்வை, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குத் தந்தருளும்; இவருக்கும் உமக்கும் பரிசுத்த ஆவிக்கும் எல்லா மேன்மையும் ம மையும் சதா காலங்களிலும் உண்டாகக் கடவன. ஆமென்.

இப்பொழுது விளம்பரஞ் சொல்லப்படும்
அதன்பின் காணிக்கை சேர்க்கப்படும்

குரு:—கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டு வந்த, அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள் (சங். 96: 8·)

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். (2 கொரி. 9: 7.)

உன்பொருளாலும், உன் எல்லாவிளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. (நீதி 3: 9)

வாங்குகிறதைப் பார்க்கிலும், கொடுக்கிறதே பாக்கியமென்றுகர்த்தராகியஇயேசுகிறிஸ்துசொன்னவார்த்தைகளை நினைக்கவேண்டும் (அப். 20: 35)

காணிக்கைப் பிரார்த்தனை.

குரு:—மிகுந்த இரக்கமுங் கிருபையுமுள்ள கடவுளே, உம்மிடத்தில் நாங்களெல்லாரும் பெற்ற நன்மை யதிகம். உம்முடைய ஜனங்கள் படைக்குங் காணிக்கையை நீர் அங்கீகரிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம். இதன் மூலமாய் மனுஷருக்குள்ளே பிரியமும், சமாதானமும் பெருகவும், எங்களாண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இராச்சியம் பரம்பவும், இக்காணிக்கையை ஆசீர்வதிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். ஆமென்.

கீதம் அல்லது கீர்த்தனை.

செபம்.

பிரசங்கம்.

கீதம் அல்லது கீர்த்தனை.

குரு:—கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் காக்கக் கடவர்; கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணி உங்கள்மேல் கிருபையாயிருக்கக் கடவர்.

கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி, உங்களுக்குச் சமாதானங் கட்டளையிடக் கடவர்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், கடவுளுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம்மனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென்.

ஓய்வு நாள் ஆராதனை

மூன்றாம் ஒழுங்கு.

கீதம் அல்லது கீர்த்தனை அல்லது தேவாரம்.

சபையார் எல்லாரும் நிற்க குருவானவர் வாசிக்க வேண்டியது.

யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாய் இருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. (சங். 24: 3. 4)

நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக் கறிக்கையிடுவேனென்றேன். (சங். 32: 5.)

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாங்கள் கலகம்பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு எங்கள் முன்பாக வைத்த அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடாமற் போனோம். ஆனாலும் எங்கள் கடவுளாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. (தானி. 9: 9, 10)

குரு: பிரியமான சகோதரரே, நம்முடைய பரமபிதாவாகிய சருவவல்லமையுள்ளகடவுளுக்கு முன்பாகப்பலவிதமான நம்முடைய பாவங்

களையும் அக்கிரமங்களையும் கபடமாய் மறையாமல், அவருடைய அளவில்லாத தயையினாலும் இரக்கத்தினாலும் பாவமன்னிப்புப் பெறும் பொருட்டு, சிறுமையும் தாழ்மையும் துக்கமுமுள்ளதாகி, கட்டளைக்குக் கீழ்ப்படியத்தக்க இருதயத்துடன் அவைகளைச் சிந்தித்துணர்ந்து சொல்லவேண்டுமென்று வேதவாக்கியங்கள் நமக்கு அங்கங்கே உணர்த்துகின்றன. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் எல்லாரும் சுத்த இருதயம் உள்ளவர்களாய் அமைந்த சத்தத்தோடே நான் சொல்லுகிற பிரகாரஞ் சொல்லி, பரம கிருபை தோன்றும் சிங்காசனத்தை என்னுடன் சமீபிக்கும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

எல்லாரும்: எங்கள் பரமபிதாவாகிய கடவுளே, நாங்கள் நினைவினாலும், பேச்சினாலும், கிரியையினாலும் உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம். எங்கள் முழு இருதயத்தோடும் உம்மில் அன்பு கூராதிருந்தோம். நாங்கள் எங்களிடத்தில் அன்பாய் இருக்கிறது போல எங்கள் அயலாரிடத்திலும் அன்புவையாதிருந்தோம். எங்கள்மேல்கிருபையாய் இரும் என்று உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். எங்கள் பாவங்களிலிருந்து எங்களைச் சுத்திகரித்தருளும். எல்லாத் தீமையையும் செயிக்கும் திராணியைத் தாரும்; எங்கள் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் வல்லமையினால் இவைகளை ஈந்தருளும். ஆமென்.

குரு: துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில் அவன் தன்

31790

ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான். (எசேக். 18. 27.)

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே; அவர் உன் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து உன் நோய்களை எல்லாம் குணமாக்கினார் (சங். 103: 2, 3.)

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோம. 5: 8)

நீங்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. (ரோம. 6: 14)

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. (2கொரி. 5: 17)

எல்லாரும்: கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை யெடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். (சங். 116: 12, 13.)

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய கடவுளுக்கு முன்பாக நம்மை ராசாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென். (வெளி. 1: 6)

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

எல்லாரும் எழுந்துநிற்க

சங்கீதம் வாசிக்க அல்லது பாடப்படும்.

குரு:—ஆதியிலே பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமையுண்டானது போல,

சபை:—இப்பொழுதும், எப்பொழுதும், சதாகாலமும் அப்படியே உண்டாவதாக; ஆமென்.

வேதபாடம்

கீதம் அல்லது கீர்த்தனை

குரு:—நமது இரட்சகர் கூறிய ஆசீர்வாதங்களைக் கேட்போமாக.

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—பரலோக இராச்சியம் அவர்களுடையது.

குரு:—துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—அவர்கள் ஆறுதலடைவார்கள்.

குரு:—சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

குரு:—நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—அவர்கள் திருப்தியடைவார்கள்.

குரு:—இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—அவர்கள் இரக்கம்பெறுவார்கள்.

குரு:—இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.

குரு:—சமாதானம்பண்ணுகிறவர்கள்பாக்கியவான்கள்;

சபை:—அவர்கள் கடவுளுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

குரு:—நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்;

சபை:—பரலோக இராச்சியம் அவர்களுடையது.

குரு:—என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்;

சபை:—சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்.

குரு:—நாம் பிரார்த்திக்கக் கடவோம்.

எல்லாரும்:—பிதாவே! எங்களுக்கிரங்கும்.
குமாரனே! எங்களுக்கிரங்கும்.
பரிசுத்த ஆவியே! எங்களுக்கிரங்கும்.

குரு:—ஆண்டவரே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

சபை:—உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும்.

குரு:—ஆண்டவரே, எங்கள் இராசாவை இரட்சியும்.

சபை:—நாங்கள் உம்மை வேண்டிக்கொள்ளுகிற பொழுது இரக்கமாய்க் கேளும்.

குரு:—உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரித்தருளும்.

சபை:—நீர் தெரிந்துகொண்ட சனங்களைச் சந்தோஷப்படுத்தும்.

குரு:—ஆண்டவரே, உம்முடைய சனங்களை இரட்சியும்.

சபை:—உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு:—ஆண்டவரே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

சபை:—தேவரீரே அல்லாமல் எங்களுக்காக யுத்தஞ் செய்வார் ஒருவருமில்லை.

குரு:—கடவுளே, சுத்த இருதயங்களை எங்களுக்குள்ளே சிருஷ்டித்தருளும்.

சபை:—எங்களிடத்தினின்று உமது பரிசுத்த ஆவியை நீக்காதிரும்.

விஷேஷ சேபங்களும் ஸ்தோத்திரங்களும் தேவைச்சுத் தச்சபடி தேரிந்துகோள்ளவும்.

எல்லாரும்:—எல்லா மனுஷருக்கும் சிருஷ்டிகர்த்தாவும், அவர்களைப் பரிபாலனம் செய்கிறவருமாகிய கடவுளே, சகலவித நிலைமையிலுமுள்ள மனுஷர் யாவரும் நீர் அருளிச்செய்த மார்க்கத்தைத் தெளிந்துகொள்ளவும், சகல தேசத்தாரும் ஆத்தும சொஸ்தந்தரும் இரட்சிப்படையவும் கிருபைசெய்யவேண்டுமென்று நாங்கள் உம்மைத் தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். கிறிஸ்தவர்களென்றுபெயர் பெற்றிருக்கும் யாவரும் சத்தியமார்க்கத்தில் நடத்தப்பட்டவர்களாய், ஆவியின்ஐக்கியத்திலும், சமாதான பந்தம் நீதி ஒழுக்கத்திலும் நடந்து, விசுவாசத்தைப்பற்றி நிலைகொண்டிருக்கும்பொருட்டு எங்குமுள்ள சபை நற்சீரடைந்து வளரும்படி தேவரீர் அதை உமது தயையுள்ள ஆவியினால் நடத்தி ஆண்டுகொள்ளவேண்டுமென்று விசேஷமாய் உமக்கு விண்ணப்பம்பண்ணுகிறோம். மேலும் உடல், பொருள் ஆவியென்னும் இவைகளைப்பற்றி நேரிடும் துன்பத்தையும் சிறுமையையும் அடைந்திருக்கிற யாவரையும்,

[விசேஷமாய்த் தங்களுக்காக விண்ணப்பப்பண்ண வேண்டுமென்று எங்களைக் கேட்டிருக்கிறவர்களையும்]

[யாராகிலும் சபையின் விண்ணப்பங்களைக் கேட்டிருந்தால் இவ் வசனத்தையும் கூட்டிச் சொல்லவேண்டும்]

பிதாவாக இரட்சிக்கும் உமது தயவுக்கு ஒப்புவிக்கிறோம். அவர்கள் படும் அவதிகளில் அவர்களை ஆற்றித் துன்பத்தைச் சகிக்கும் பொறுமையை அவர்களுக்குக் கொடுத்து

தங்களுக்குண்டான சகல கிலேசங்களிலும் நின்று அவர்கள் சந்தோஷமாய் விடுதலையாகும்படி இயேசுகிறிஸ்துவினிமித்தம் அருள்செய்ய வேண்டுமென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

பரிசுத்த கிறிசோஸ்தம் என்பவருடைய பிரார்த்தனை.

குரு:—இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி, எங்கள் சாதாரண விண்ணப்பங்களைச் செய்யும்படி எங்களுக்கருள் செய்த சருவ வல்லமையுள்ள கடவுளே, இருவராயினும் மூவராயினும் என் நாமத்தில் கூடிவரும் பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளுவேனென்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறீரே; ஆண்டவரே, தேவரீர் உமது அடியாராகிய எங்களுக்கு உபயோகமாய், எங்கள் விருப்பங்களும், விண்ணப்பங்களும் நிறைவேறும்படி செய்து, இம்மையிலே தேவரீர் அருளிய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய சீவனையும் எங்களுக்கு அநுக்கிரகித்தருளும். ஆமென்.

இப்பொழுது விளம்பரம் சொல்லப்படும்; அதன்பின் காணிக்கை சேர்க்கப்படும்.

குரு:—பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலேஉங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத்திருடுகிறதுமில்லை. (மத். 6: 19, 20)

பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தியிருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல. (லூக். 12: 15)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படி, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. (2கொரி. 81: 9)

எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், அன்புஎனக்கு இராவிட்டால் எனக்குப்பிரயோசனம ஒன்றுமில்லை. (கொரி. 13, 3)

கீதம் அல்லது கீர்த்தனை.

செபம்.

பிரசங்கம்.

கீதம் அல்லது கீர்த்தனை.

குரு:—நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே நமக்குச்செய்ய வல்லவராகிய அவருக்குச் சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக.

நம்முடையகர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் பிதாவாகியகடவுளுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம்மனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

ஒய்வுநாள் ஆராதனை

நான்காம் ஒழுங்கு.

குரு:—ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள்.

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத்தொழுதுகொள்ளுங்கள். (சங். 96: 7-9)

நீங்கள் அமர்ந்திருந்து நானே கடவுள் என்று அறிந்துகொள்ளுங்கள்; சாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். (சங். 46: 10)

கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; அவர் தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்தெழுந்தருளினார். (சகரி 2: 13)

மௌனப் பிரார்த்தனை

கீதம் அல்லது கீர்த்தனை அல்லது தேவாரம்.

குரு:—என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கி. 3: 7)

உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். (அப் 3: 20)

தேவனுக் கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். (சங். 51: 17)

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவா. 1: 8, 9)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! நாம் இந்த ஆராதனையிற் கூடிவந்திருக்கிற நோக்கத்தை மனதில்வைத்துக்கொள்வோமாக.

கடவுளுடைய கையினின்று பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகத் துதிசெலுத்தவும், அவருடைய புகழ்ச்சியைப் பிரசித்தப்படுத்தவும், அவருடைய பரிசுத்த வாக்கைக் கேட்கவும், நம்முடைய பாவங்களை அறிக்கையிடவும், நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் தேவையானவைகளை வேண்டிக்கொள்ளவும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே கூடிவந்திருக்கிறோம். ஆகையால் முதலாவதாய் நம்முடைய பாவங்களை உணர்ந்து கடவுள் முன்னிலையில் மனத் தாழ்மையோடு அறிக்கையிடுவோமாக.

பாவ அறிக்கை

குரு:—மகா பரிசுத்தமுள்ள பிதாவே! நாங்கள் உமது பிள்ளைகளென்று சொல்லப்படுவதற்குத் தகாதவர்கள்; உமது பிரமாணங்களை

மீறிப் பாவத்திற்கு உட்பட்டவர்களென்று அறிக்கைசெய்கிறோம்.

சபை:—அன்புள்ள தகப்பனே! எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னித்தருள வேண்டுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறோம்.

குரு:—உமது கிருபையை மறந்து, செபத்தை அலட்சியம்செய்து உமது ஊழியத்தில் நிர்விசாரிகளாயிருக்கிறோம்,

சபை:—அன்புள்ள தகப்பனே! எங்களுக்கு மன்னித்தருளவேண்டுமென்று உம்மைப்பிரார்த்திக்கிறோம்.

குரு:—மனிதர் பார்வையில் அயோக்கியராய் நடந்து, உமது நாமத்தைக் கனவீனப்படுத்தி மனிதருக்குத் தெரியாமல் இரகசிய பாவங்களைச் செய்திருக்கிறோம்.

சபை:—அன்புள்ள தகப்பனே! எங்களுக்கு மன்னித்தருளவேண்டுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறோம்

குரு:—பிறர் துக்கத்தையும் உபத்திரவங்களையும் கவனியாமல் எங்கள் சொந்தச் சுகத்தையும் நல்வாழ்வையுமே கருதிவருகிறோம்.

சபை:—அன்புள்ள தகப்பனே! எங்களுக்கு மன்னித்தருளவேண்டுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறோம்.

குரு:—எங்கள் தோஷங்களை நீர் மன்னித்ததுபோல நாங்கள், பிறர் குற்றங்களை மன்னியாதிருக்கிறோம்.

சபை:—அன்புள்ள தகப்பனே! எங்களுக்கு மன்னித்தருள வேண்டுமென்று உம்மை பிரார்த்திககிறோம்.

குரு:—இதோ! உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. (1 தீமோ. 1: 15) ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலி அவரே. (1 யோவா 2: 1, 2)

எல்லாரும்:—பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலேயுஞ்செய்யப்படுவதாக எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராச்சியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

சங்கீதம் வாசிக்க அல்லது பாடப்படும்.

குரு:—ஆதியிலே...........

சபை:—இப்பொழுதும்...........

வேதபாடம்.

கீதம் அல்லது கீர்த்தனை.

எல்லாரும் எழுந்துநிற்கப் பின்வரும் விசுவாச அறிக்கை சொல்லப்படும்.

குருவானவர்:—தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

சபையார்:—உன்னதத்தில் தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

குரு:—தேவன் அன்பாகவேயிருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

சபை:—உன்னதத்தில் தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

குரு:—நாம் புத்திரசுவிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைக் கடவுள் அனுப்பினார்.

சபை:—கடவுள் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

குரு:—நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

சபை:—கடவுள் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

குரு:—நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய கடவுளுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே ஜீவனுள்ள நம்பிக்கையுண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார்.

சபை:—கடவுள் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

குரு:—நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாகக் கடவுள் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களிலனுப்பினார்.

சபை:—ஆண்டவராகிய உமக்கே துதி உண்டாவதாக.

குரு.—நீங்கள் இனிப் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுக்கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.

சபை:—ஆண்டவராகிய உமக்கே துதி.

குரு:—பிரியமானவர்களே! இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்ப

டும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாமவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

சபை:—ஆண்டவராகிய உமக்கேதுதி.

குரு:—செபம் செய்வோமாக.

சகல மனுஷருக்காகவும் பிரார்த்திக்க வேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிட்ட சருவ வல்லமையுள்ள கடவுளே;

எங்கள் அரசரையும் அவரது அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்ட சகல அதிகாரிகளையும் ஆசீர்வதித்து அவர்கள் தங்கள் தங்கள் சனங்களின் நன்மைக்காகத் தேவ பயத்துடன் அதிகாரம் செலுத்தும்படி அவர்களுக்குக் கிருபை புரிய வேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு:—கிறிஸ்துவின் இராச்சிய விருத்திக்காகப் பற்பல தேசங்களிலும் வருந்திப் பிரயாசப்படுகிறது உமது ஊழியர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்து ஊக்கத்தோடே உமக்குத்தொண்டுசெய்ய அவர்களை எவியருளவேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு:—வார்த்தை அல்லது எழுத்துமூலம் சனங்களின் மனதில் தற்சிந்தனைகளை உண்டாக்குவோர் உமது பரம ஞானத்தினால் வழி நடத்தப்படவும், அன்பின் நேர்மையும், சத்தியமும் அவர்களைப் பரவசமாக்கவும் வேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு:—தரித்திரரை உயர்த்த அவர்கள் மத்தியில் ஊழியம் செய்வோரும், ஒடுக்கப் படுவோருக்கு விடுதலையை அழித்துத் தீமையின் இராச்சியத்தை அழித்து நேர்மையின் இராச்சியத்தை ஸ்தாபிப்போரும், அவைகளில் வெற்றியடைய, பலப்படுத்தப் பட வேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு:—உடம்புக்கு ஆரோக்கியத்தையும் வியாதிஸ்தருக்குப் பராமரிப்பையும் அருளுவோரை நீர் பாதுகாக்க வேண்டுமென்றும், அதனால் அவர்கள் பூரண வைத்தியனான இயேசு கிறிஸ்துவின் அடிச் சுவடுகளைப் பின்பற்ற அவர்களை ஏவவேண்டுமென்றும்,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு:—உபாத்திமார் தங்கள் மாணாக்கரைச் சத்திய பாதையில் நடத்தி, வாலிபரைத் தீய பழக்கத்திலும், கெட்டசினேகத்திலும் நின்று விலக்கிக் காப்பாற்ற அவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

குரு:—சாதிவித்தியாசம், தன்னயம், பெருமை ஆகிய இவைகள் அழியும்படி, எங்கள் சபை

கொழும்பு தமிழ்ச் சங்கம்

யிலும் சனத்திலும் அன்பின் ஆவியும் சுய வெறுப்பும் பணிவிடை செய்தலும் அதிக ரிக்கச் செய்ய வேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள் ளுகிறோம்.

குரு:—ஒவ்வொரு குடும்பத்திலும் ஐக்கிய சிநேக மும், தேவபயமும் உண்டாகவும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஞானத்திலும், அன்பி லும் வளர்க்கவும், பிள்ளைகள் தேவஞானத் திலும் தயவிலும் வளரவும் வேண்டுமென்று,

சபை:—ஆண்டவரே உம்மை வேண்டிக் கொள் ளுகிறோம்.

இப்பொழுது விளம்பரஞ் சொல்லப்படும்.
அதன்பின் காணிக்கை சேர்க்கப்படும்.

குரு:—கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கை யோடே வராமல், தேவனாகிய கர்த்தர் தனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்க தாக, அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்ற படி காணிக்கையைக் கொண்டு வரக்கடவன். உபா. 16: 17.

வாரியிறைத்தும் விருத்தி யடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண் ணியும் வறுமை யடைவாரும் உண்டு. நீதி. 11: 24.

இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவச மாய்க் கொடுங்கள். மத். 10: 8.

கீதம் அல்லது கீர்த்தனை.

செபம்.

பிரசங்கம்.

கீதம் அல்லது கீர்த்தனை.

குரு:—வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒரு வரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான கடவுளுக்குக் கனமும் மகத் துவமும், வல்லமையும், அதிகாரமும் இப் பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவி னுடைய கிருபையும், பிதாவாகிய கடவுளு டைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் நம் அனைவரோடும் கூட இருப் பதாக. ஆமென்.

சங்கீதங்கள் வாசிக்கப்படும் கிரமம்.

ஞாயிறு			ஞாயிறு		
1	103		27	84	
2	1		28	86	
3	8		29	91	
4	15		30	92	
5	16		31	93	
6	19		32	95	
7	23		33	96	
8	25		34	97	
9	27		35	98	
10	32		36	100	
11	33		37	104	1 –15
12	34		38	„	16—35
13	36		39	107	1—16
14	37	1—26	40	111	
15	40	1—13	41	116	
16	42		42	119	1—16
17	43		43	„	25—40
18	46		44	121	
19	48		45	122	& 126
20	51	1—17	46	130	
21	63	1— 8	47	139	1—18
22	65		48	144	
23	67		49	145	
24	72		50	147	
25	77		51	148	
26	80		52	90	

கிறிஸ்துவின் ஜனன திருநாள்: { சங் 85, எசா. 9. 1–7
லூக். 2. 46—55

சாம்பல் புதன்கிழமை: சங். 51, 130

பெரிய வெள்ளிக்கிழமை { சங். 22. 1-19,40 1-13
எசா. 53.

கிறிஸ்து உயிர்த்தெழுந்ததிருநாள்: சங். 111, 118 எசா. 40. 1—11

கிறிஸ்துபரத்துக்கேறினதிருநாள்: சங். 24,எசா.52 7-15

பரிசுத்த ஆவியின் திருநாள்: சங். 45, 104. 1—15

உற்சவம்: சங். 65,89.1–18,148

ஒரு காலை சங்கீதம்: 5.

ஒரு மாலை சங்கீதம்: 4

நோயாளிகளுக்கேற்ற சங்கீதங்கள்: 23, 27, 34, 42, 91, 116.

Magnificat பரி. லூக். 1: 46—55.

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப் படுத்துகிறது; என் ஆவி என் இரட்சகராகிய கடவுளில் களி கூருகிறது.

அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்.

இதோ, இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பி விட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ் செய்ய நினைத்துத் தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

Benedictus. பரி. லூக்கா 1: 68-79

இஸ்ரவேலின் கடவுளாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்,

தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி,

உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும், நீதியோடும், எனக்கு ஊழியஞ் செய்யக் கட்டளையிடுவேன் என்று, அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்,

31790

ஆதி முதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே,

தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் நம்மை இரட்சிக்கும்படிக்கு,

தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார்.

நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும்,

நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்பாக நடந்து போவாய்.

அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,

நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும், எப்பொழுதும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

விசேஷ சேபங்கள்.

பிழை நினைந்து இரங்கல்

பாவ அறிக்கைச் சேபத்துக்குப் பதிலாக இதைப் பாடலாம்.

1

நின்னடிக் கன்பு செய்யா நீசனேன் ஈசனேயுன்
பொன்னடிக் கன்பு செய்யும் புண்ணியர்குழாத்துட்புக்க
நன்னடை சற்றுமில்லேன் நன்றெலா மொருவி நின்ற
என்னடை யிகந்துமில்லேன் என்செய்வான் றோன்றி
னேனே.

2

தன்னுயிர் போலவிந்தத் தடங்கடற் புடவிமேய
மன்னுயிர்க் கிரங்கி மேனாள் மனுமகனாகத் தோன்றி
இன்னுயிர் கொடுத்து ரட்சை யீட்டிய விறையையேத்தி
என்னுயிர் ஓம்புகில்லேன் என்செய்வான் றோன்றி
னேனே.

3

வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனென் றிகழ்ந்திடா
தென்
புன்கணுக் கிரங்கியோர் பூம் பொழிலிடைப்புனிதமூர்த்தி
நின்கணீர் சொரிந்துஞ் செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்
டும்
என்கணீர் சொரியக் காணேன் என்செய்வான் றோன்றி
னேனே.

4

சுத்தனோ அல்லன் நன்மைசொல்லவெட்டுணையுமல்லேன்
பித்தனான் பெரிய பாவி பிழைக்குமா றுணர மாட்டேன்
நித்தநீ யருளு மீவை நினைகிலே னன்றி யீனம்
எத்தனை யிறைவனே யானென் செய்வான் றோன்றி
னேனே.

5

அழுகிலேன் மனங்கசந்திட் டறியனேன்பிழையையுன்னி
விழுகிலே னின் பாதார விந்தமே கதியென் றேத்தித்
தொழுகிலே னவியாலே தொடர்பவத் துயிலை நீத்திங்
கெழுகிலே னீசனே யானென் செய்வான் றோன்றி
னேனே.

காலை ஆராதனைக்குரியது.

எங்கள் பரமபிதாவும் சருவ வல்லமையுமுள்ள நித்திய கடவுளுமாகிய ஆண்டவரே, எங்களுக்கு ஒரு ஆபத்தும் நேரிடாமல் இந்நாள் வரைக்கும் எங்களைக் காத்தீர்; இந்நாளிலும் உமது மகா வல்லபத்தினால் எங்களைக் காப்பாற்றியருளும்; நாங்கள் யாதொரு பாவத்திலும் விழாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும், நாங்கள் செய்வதெல்லாம் உம்முடைய ஆளுகையினால் நடத்தப்பட்டு உமது சமுகத்திற் செவ்வையாய் விளங்குப்படி எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவி னிமித்தம் தயை செய்தருளும். ஆமென்.

மாலை ஆராதனைக்குரியது.

ஆண்டவரே, எங்கள் அந்தகாரம் நீங்க வெளிச்சம் தந்து இந்த இராத்திரியில் நேரிடும் சகல மோசங்களுக்கும் பயங்கரங்களுக்கும் உமது மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்க வேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

இரக்கம் நிறைந்த கடவுளே, கடந்துபோகிற உலகத்தின் மாற்றங்களினாலும் சந்தர்ப்பங்களினாலும் தொய்ந்துபோன நாங்கள் உம்முடைய நித்திய மாறாமையில் ஆறுதலடையத் தக்கதாக, இந்த இரா முழுவதும் எங்களுடன் கூட இருந்து எங்களைக் காத்தருளும்படி எங்கள் ஆண்டவராகிய நித்திய இரட்சகர்மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

புது வருஷம்.

அழிவில்லாதவரும் நித்தியருமாகிய ஆண்டவராகிய கடவுளே, அபாத்திர அடியார்களாகிய எங்களை இன்னொருவருஷத்தின் துவக்கத்திற்குக் கொண்டுவரச் சித்தங் கொண்டீரே. எங்கள் கடந்த கால மீறுதல்களை மன்னித்து, எங்கள் ஜீவநாளெல்லாம் எங்களோடு தங்கியருள வேண்டுமென்றுஉம்மைத் தாழ்மையாய் மன்றாடுகிறோம். எங்களுக்கு நேரிடும் சகல துன்பங்களிலும் சோதனைகளிலும் எங்களைப் பாதுகாத்து வழி நடத்தி நாங்கள் வயதில் வளருகிறதுபோற் தேவரீருடைய ஆசீர்வாதத்தால் கிருபையில் வளர்ந்தேறவும், கடைசியில் எங்கள் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடு முடிக்கவும் கிருபை செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

கிறிஸ்துவின் ஜனன திருநாள்.

சர்வ வல்லமையுள்ள கடவுளே, உமது ஒரே பேறான குமாரனைத் தந்தருளி அவர் எங்கள் தன்மையைத் தரித்துக் கொள்ளவும், கற்புள்ள கன்னிமரியாளிடத்தில் பிறக்கவும் தயைசெய்தீரே. மறுஜெனனம் அடைந்து புத்திர சுவிகாரத்தினாலும் கிருபையினாலும் உமக்குப் பிள்ளைகளான நாங்கள் உமது பரிசுத்த ஆவியினாலே தினம் தினம் புதுப்பிக்கப்படக் கிருபை செய்தருளும். ஒரு நட்சத்திரத்தினாலே புறச்சாதியாரை வழி நடத்தி, அவர்களுக்கு உம்முடைய ஒரே பேறான குமாரனை வெளிப்படுத்தினதுபோல, இம்மையில் விசுவாசத்தினால் உம்மை அறிந்திருக்கிற நாங்களும், மறுமையில் உமது தேவ தத்துவத்தைத் தரிசிக்கும் ஆனந்தத்தை அனுபவிக்கும்படி, உம்மோடும் பரிசுத்தாவியோடும் எப்பொழுதும் ஒரே கடவுளாகச்

சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

பெரிய வெள்ளிக்கிழமை.

சர்வ வல்லமையுள்ள பரம பிதாவே, எங்கள் மீட்பராகிய இயேசு கிறிஸ்து எங்களுக்காகக் காட்டிக்கொடுக்கப்படவும், அக்கிரமக்காரருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் மரணமடையவும் மனதாரச் சம்மதித்ததினிமித்தம் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். திருச்சபையாகிய சரீரம் முழுவதையும் உம்முடைய ஆவியினாலே ஆண்டு பரிசுத்தமாக்கிக்கொண்டு வருகிறீர். அதன் அவயவங்களாகிய நாம் ஒவ்வொருவரும் நாம் நாம் அழைக்கப்பட்டிருக்கிற நிலைமையிலும் பணிவிடையிலும் உண்மையாயும் பக்தியாயும் உம்மைச் சேவிக்குப்படி, உம்முடைய பரிசுத்த சபையிலுள்ள எவ்வகையானவர்களுக்காகவும் நாங்கள் செய்கிற விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் அங்கிகரித்தருளும். எல்லா மனிதரையும் உண்டாக்கினவரும் உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாதவரும், பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறவருமயிருக்கிறஇரக்கமுள்ளதேவனே, யூதர், மகம்மது, சிவ, புத்த மார்க்கத்தார், வேதப்புரட்டர் யாவருக்கும் இரங்கி, சகலவித அறியாமையையும் இருதய கடினத்தையும் உமது வசனத்தை அசட்டை பண்ணும்துணிகரத்தையும் அவர்களை விட்டு நீக்கி, மீதியாயிருக்கிற மெய் இஸ்ரவேலரோடே கூட அவர்கள் இரட்சிக்கப்படவும், இயேசு கிறிஸ்துவாகிய ஒரே மேய்ப்பரிடத்தில் ஒரே மந்தையாகவும், அவர்களையும் தேவரீ

ருடைய சபையாகிய மந்தையில் திருப்பிச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுக் கெஞ்சிக்கேட்கிறோம். ஆமென்.

உயிர்த்தெழுந்த திருநாள்.

சர்வவல்லமையுள்ள பரம தகப்பனே, உம்முடைய ஏக சுதனாகிய இயேசு கிறிஸ்துவினால் மரணத்தை செயித்து நித்திய சீவ வாசலைத் திறந்தீரே; எங்களுக்கு முன் செல்லும் உமது விசேஷித்த கிருபையினால் எங்கள் மனதில் நல்விருப்பங்களை யுண்டு பண்ணுகிறதுபோல, இடைவிடாமல் துணை நிற்கும்கிருபையினால் அவ்விருப்பங்கள் நற்கிரியைகளாய்ப் பயன்படும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். நாள்தோறும் நாங்கள் பாவத்துக்குச் செத்து, அவருடைய உயிர்த்தெழுதலின் சந்தோஷத்தினால் என்றும் அவரோடு சீவிக்க, உம்மோடும்பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாக என்றென்றைக்கும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தாழ்மையோடே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

திரித்துவ திருநாள்.

சர்வவல்லமையுள்ள நித்திய கடவுளே, மெய் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டு மகிமை பொருந்திய நித்திய திரித்துவத்தை அறிக்கையிடவும், வல்லமை பொருந்திய திவ்விய மகத்துவத்தை ஏகத்துவமாக வணங்கவும் உமது அடியாராகிய எங்களுக்குக் கிருபைசெய்திருக்கிறீரே. இந்தவிசுவாசத்திலே எங்களை உறுதிப்படுத்தி, இதற்கு

விரோதமான யாவற்றிற்கும் எப்பொழுதும் எங்களை விலக்கிக் காப்பாற்ற வேண்டுமென்று சதாகாலமும் ஒரே கடவுளாகச் சீவித்து அரசாளுகிற உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

பரிசுத்த ஆவியின் திருநாள்

ஆண்டவரே, அன்புள்ள கடவுளே, உம்முடைய பரிசுத்த ஆவியை அனுப்பி அவருடைய ஒளியினாலே, விசுவாசமுடைய ஜனத்தின் இருதயங்களைப் போதித்துப் பிரகாசிப்பித்தீரே; அந்த ஆவியினாலே நாங்களும் எல்லாக் காரியங்களையுங் குறித்து நிதானமாய் யோசிக்கவும், அவருடைய பரிசுத்த தேற்றரவினாலே இடைவிடாமல் சந்தோஷிக்கவும் கட்டளையிட்டருளவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாகச் சதாகாலமும் சீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியங்களினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

கிறிஸ்துவின் வருகையாகிய அற்வேந் என்னும் ஞாயிறு

சர்வவல்லமையுள்ள கடவுளே! உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கச் சிறந்த மகத்துவத்தோடே திரும்பிவரும் கடைசி நாளிலே, நாங்கள் உயிர்த்தெழுந்து, நித்தியசீவனைப் பெறும்படியாக அவர் மிகுந்த தாழ்மையோடு எங்களைச் சந்திக்க வந்த சாவுக்கினமான இந்தச் சீவகாலத்தில், நாங்கள் அந்தகாரத்தின் கிரியைகளைத் தள்ளிவிட்டு ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக் கிருபைசெய்ய வேண்டுமென்று உம்மோடும், பரி

சுத்த ஆவியோடும், இப்பொழுதும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

உபவாசத் திருநாள்

எங்கள் நிமித்தம் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசம் செய்த கர்த்தாவே! உமது திவ்விய ஏவுதலுக்கு நாங்கள் கீழ்ப்படிந்து, மெய்யான நீதியும் பரிசுத்தமும் உள்ளவர்களாய் நடக்கும்படி, எங்கள் சரீரம் ஆவிக்கு அடங்கத்தக்கதாய் நாங்கள் உபவாசம் செய்வதற்கு எங்களுக்குக் கிருபை செய்தருளும். எங்களை இரட்சித்துக்கொள்ள நாங்கள் சக்தியற்றவர்களென்று அறிந்திருக்கிறீரே. சரீரத்துக்கு நேரிடும் எந்த உபத்திரவங்களும், ஆத்துமாவை விரோதித்துச் சேதப்படுத்தும் எந்தப் பொல்லாத நினைவுகளும், எங்களை அணுகாதபடி காத்தருளும். எங்கள் துர்க்கிரியைகளின் நிமித்தம் தண்டனைக்குப் பாத்திரராய் இருக்கிற எங்களுக்கு இரங்கி, உமது கிருபையால் வரும் ஆறுதலினாலே, எங்களைத் தேற்றி விடுதலையாக்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

குரு சங்க ஓய்வுநாளுக்காக

கிருபை நிறைந்த தகப்பனே, இப்பொழுது கூட்டத்தில் சமுகமாயிருக்கும் மாகாண அக்கிராசனரும், குருமாரும், சபைகளின் பிரதிநிதிகளும் உமது சபையின் நன்மைக்காகவும், உமது நாமத்தின் மகிமைக்காகவும், இத்தேசத்தில் உமது இராச்சியத்தின் விருத்திக்காகவும் ஏகோபித்து ஒரே மனதாய் ஞானமாய் நல் ஆலோசனை செய்ய,

உமது பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தினால் வழிநடத்தும்படி எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் தாழ்மையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

இராசாவுக்காகவும், இராச குடும்பத்தாருக்காகவும், அதிகாரிகளுக்காகவும்

பரம சிங்காசனத்தில் வீற்றிருந்து பூலோகத்தை அரசாளுகிற ஆண்டவரே, எங்கள் காருண்ணிய இராசாவாகிய 5 ம் ஜோட்சையும், எங்கள் இராசாத்தியாகிய அவர் பத்தினியையும், உவேல்ஸ் இளவரசையும், இராச குடும்பத்தாரனைவரையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். சத்துருக்களின் கைக்கு அவர்களைத் தப்புவித்து, அவர்களுக்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் ஈந்தருளும். உமது பரிசுத்த ஆவியின் கிருபையால் அவர்களை நிரப்பி, உமது பரம வரங்களை அவர்களுக்குத் திரளாகக் கொடுத்தருளும். அவர்கள் எப்பொழுதும் உமது சித்தத்துக்கு இணங்கவும் உமது வழியில் நடக்கவும் கிருபைசெய்தருளும். கடைசியாக உமது மகிமையுள்ள இராச்சியத்துக்குள் அவர்கள் பிரவேசிக்கச் செய்தருளும்; இத்தேசத்தின் தேசாதிபதியையும், அவர் சங்கங்களையும், அவரின்கீழ் அதிகாரம் செலுத்திவருகிற யாவரையும் ஆசீர்வதித்தருளும். அவர்கள் எல்லாக் காரியங்களையும் நீதியாய் நடத்தும்படி செய்தருளும். தேசத்தின் பிரசைகளெல்லாரும் அவர்கள் மூலமாக வாழ்வு அடையும்படிக்கும், இத்தேசத்தில், உமது இராச்சியம் ஸ்தாபிக்கப்படும்படிக்கு அவர்கள் அதிகாரத்தினால் சத்தியம், உண்மை, நீதி, பரிசுத்தம்முதலிய சற்குணங்கள் நிரம்பிப் பரந்தோங்கி நிலைநிற்கக்

கிருபை செய்தருள வேண்டுமென்று எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

குருமாருக்காகவும், சபையாருக்காகவும்

அற்புதங்களைச் செய்கிறவராகிய சருவவல்லமையுள்ள கடவுளே, உம்முடைய சுவிசேஷ ஊழியக்காரர் யாவர்மேலும், அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள் மேலும் சொஸ்தந்தரும் உமது ஆவி தங்கும்படி அனுப்பி அவர்கள் உமக்குப் பிரியமுள்ளவர்களாய் நடக்கும்பொருட்டு, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள்மேல் ஓயாமற் பெய்யும்படி செய்தருளும். ஆண்டவரே, எங்களுக்காகப் பரிந்து பேசுகிறவரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மகிமை விளங்கும்பொருட்டு இப்படிச் செய்தருளும். ஆமென்.

சுவிசேஷ ஊழியத்துக்காக

எங்கள் இரட்சிப்பின் கடவுளே, மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கும் சுவிசேஷத்தை எங்களுக்குத் தந்தருளியதுமன்றி, அதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துதலே எங்கள் சீவியத்தின் சலாக்கியமும் உத்தரவாதமுமாக்கி இருக்கிறீரே; தேவரீர் உமது சபையாராகிய நாங்கள் உம்முடைய இரட்சிப்பை நாளுக்குநாள் மற்றவர்களுக்குத் தெரிவிக்கும்படி எங்களை உமது ஆவியினால் ஏவியருளவேண்டுமென்றும், அங்கங்கே இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தும் உமது சுவிசேஷகருடைய ஊழியத்தை ஆசீர்வதித்து, அவர்கள் பேசும் சத்தியங்களைக் கேட்குஞ் சனங்கள் அவைகளை விசுவாசித்து, நற்சீர் அடையத்தக்கதாக உமது இரட்சிக்கும் புயத்தை வெளிப்

படுத்த வேண்டுமென்றும், உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்த எங்கள் அருமையான இரட்சகரின் மகிமை விளங்கும்பொருட்டு இப்படிச் செய்தருளும். ஆமென்.

சுதேசத்திற்காகவும் உலகத்திற்காகவும்

சர்வ சீவ தயாபர பிதாவாகிய கடவுளே, மனுஷ சாதியான சகல சனங்களையும் ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கிப் பூமியின்மேல் குடியிருக்கச் செய்து, தூரமானவர்களுக்கும் சமீபமானவர்களுக்கும் சமாதானத்தைக் கூறும்படி, உமது திருக் குமாரனை அனுப்பினீரே; இலங்கை இந்தியா தேசங்களிலும் மற்றுமுள்ள தேசங்கள் எல்லாவற்றிலுமுள்ள சனங்கள், உம்மை நாடித் தேடிக் கண்டடையும்படி அருள் செய்து, மனுமக்கள் யாவர் மேலும் உம்முடைய ஆவியின் அனுக்கிரகத்தை மழைபோல ஊற்றி அருளுவோம் என்ற உமது திருவாக்கைச் சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

உலக சமாதானத்திற்காக.

சருவ வல்லமையுள்ள கடவுளே, சர்வ சத்தியத்திற்கும் சமாதானத்துக்கும் காரணரே!

எல்லா மனுஷரின் இருதயங்களிலும் சமாதானத்தை விரும்பும் உண்மையான ஆசையை உண்டாக்கியருளும். பூமியின் சாதிகளின் நன்மைக்காக ஆலோசனை செய்கிறவர்களை உமது சுத்த சமாதான ஞானத்தினால் வழிநடத்தியருளும். பூமியானது உமது அன்பின் அறிவினால்

நிரம்பும் வரைக்கும் சமாதான நிலையில் உமது இராச்சியம் முன்னேற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் கிருபை செய்தருளும்! ஆமென்.

சாதி வேற்றுமை நீங்க

எல்லா மனிதரையும் ஒரே இரத்தத்தினால் உண்டாக்கி, நாங்கள் யாவரும் ஒருவருக்கொருவர் அவயவங்கள் என்று கற்பித்த கடவுளே! இத்தேசத்திலுள்ள சகல சனங்களும் சாதிவித்தியாசம் பாராது சகோதர ஐக்கியமாய்ச் சீவிக்க, உதவி செய்தருளும். எல்லாவித அவநம்பிக்கையும் கசப்பும் எங்களை விட்டு நீங்க அருள் செய்யுமென்று வேண்டுகிறோம். கிறிஸ்து எங்கள் சகோதாருக்காகவும் மரித்திருக்க, நாங்கள் அவர்களை அற்பாய் மதிக்கும் பெருமையிலிருந்து எங்களைக் காத்தருளும். பெரியவர்கள் சிறியவர்களுக்கும், பலவித சலாக்கியங்களைப் பெற்றவர்கள் குறைவுள்ளவர்களுக்கும் உதவி செய்யக் கிருபை செய்தருளும். நாங்கள் நீதியையும் சமத்துவத்தையும் நாடி, மற்றவர்களின் தேவைகளுக்காகக் கவலைப்பட்டு, அவர்களோடே ஐக்கியமாய் ஒத்துழைத்து, எங்கள் எல்லாருக்கும் ஒரே ஆண்டவரானவருடைய நாமத்துக்கு மகிமையாய்ச் சீவிக்க, உதவி செய்ய வேண்டுமென்று தாழ்மையாய் வேண்டி நிற்கின்றோம். ஆமென்.

சபை ஐக்கியத்துக்காக

கடவுளே, எங்கள் ஏகரட்சகரும் சமாதானப் பிரபுவுமாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, சஞ்சலத்துக் கேதுவான எங்கள் பிரிவினைகளால் வரும் பெரும் மோசங்களை நாம் பயபக்தியோடு சிந்தித்து உணரும்படி

அநுக்கிரகஞ் செய்யும். சகலவிதமான பகைமையையும், பிடிவாதத்தையும், திவ்விய ஐக்கியத்துக்கும் அந்நியோந்நியத்துக்கும் தடையாயிருக்கும் மற்றெல்லாவற்றையும் எங்களைவிட்டகற்றியருளும். ஒரே சரீரமும் ஒரே ஆவியும் ஒரே நம்பிக்கைக் கேதுவான அழைப்பும் ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞான ஸ்நானமும், எங்கள் எல்லாருக்கும் ஒரே கடவுளும் பிதாவுமாயிருப்பதுபோல, நாங்கள் ஒரே இருதயமும், ஒரே ஆவியுமுள்ளவர்களாகச் சத்தியம், சமாதானம், விசுவாசம் என்னும் கச்சையினாற் கட்டப்பட்டு, ஒரே மனத்தினாலும், ஒரே வாக்கினாலும் உம்மை மகிமைப் படுத்துகிறவர்களாயிருக்கும்படி எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்,

தினப் பாடசாலைகளுக்காக

‘பிள்ளைகளை என்னிடத்தில் வர விடுங்கள், அவர்களைத் தடைசெய்யாதிருங்கள்’ எனக் கட்டளையிட்டு அவர்களை ஆசீர்வதித்த இயேசு கிறிஸ்துவின் பரமபிதாவே, கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என வெளிப்படுத்தியிருக்கிறீரே. எங்கள் பாடசாலைகளில் கல்வி கற்கும் எல்லாப் பிள்ளைகளையும், அவர்கள் உபாத்திமாரையும் உமது ஆசீர்வாதத்தால் நிரப்பும். உமது பிள்ளைகளின் மனங்கள் நல் அறிவினால் பிரகாசிக்கப்படவும், அவர்கள் இருதயங்கள் உம்மையும் உமது குமாரனையும் பற்றும் அன்புக்கும் நாளாந்தம் பரிசுத்தாவியானவரால் இழுக்கப்படவும் எங்கள் இரட்சகராயிருக்கிற இயேசு கிறிஸ்து மூலம் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

ஓய்வுநாட் பாடசாலைகளுக்காக

பிள்ளைகளைப் பரிபாலித்துப் போதிக்கும்படி உமது சபைக்குக் கட்டளையிட்ட சருவ வல்லமையுள்ள எங்கள் பரம தகப்பனே, நான் உனக்கு வெளிப்படுத்தும் வார்த்தைகள் உன் இருதயத்தில் இருப்பதாக; அவைகளைக் கருத்தாய் உன் பிள்ளைகளுக்குப் போதிப்பாயாக என்று வெளிப்படுத்தினீரே. அறிவை யுணர்த்தி ஞானத்தைப் போதிக்கும் உபாத்திமாரை (ஊழியக்காரரை) தருவீராக. சமுகமளிக்கும் பிள்ளைகள் வினாவிக் கற்றுக் கொள்ளவும், சத்திய அறிவினால் நிரப்பப்படவும், தங்கள் ஆயுள் பரியந்தம் உம்மைவணங்கி சேவிக்கவும், கிருபை அளிக்கும்படி எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

வைத்திய ஊழியத்திற்காக

சர்வ வல்லமையுள்ள கடவுளே, உமது பிரிய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மனுஷருக்குண்டான சகல வியாதிகளையும் குணமாக்கி, நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தாரே. நமக்குள்ளும் விசேஷமாய் நம்மூரிலுள்ள வைத்தியசாலைகளில் வேலை செய்வோருக்குள்ளும் இந்த ஊழியம் நிலைபடச் செய்தருளும்.

நோயாளிகளுக்குச் சுகத்தையும், சந்தோஷத்தையும், ஆன்ம சுகத்தையும் கட்டளையிட்டருளும். வைத்தியர்களுக்கும் பராமரிக்கும் நேஷ்மாருக்கும், ஞானத்தையும் அநுகூலத்தையும் பொறுமையையுங் கொடுத்தருளும். பாடுகளை நீக்கி உமது அன்பின் நோக்கத்தை விருத்தி செய்யப் பிரயாசப்படும் யாவர் மேலும், உமது

ஆசீர்வாதம் தங்கவேண்டுமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்ளுகிறோம் ஆமென்.

நோயாளிகளுக்காக

ஜீவனையும் சுகத்தையும் அருளுகிற சர்வ வல்லமையுள்ள பிதாவே, நோயாளரையும், கஷ்டப்படுவோரையும், விசேஷமாய் எங்கள் செபங்களில் நினைப்பூட்டப் படுகிறவர்களையும், கிருபையாகக் கண்ணோக்க வேண்டுமென்று பணிந்து கேட்கிறோம்.

உமது தயவுள்ள சித்தத்தின்படி வியாதிஸ்தருக்கும், அவர்களைப் பராமரிக்கிறவர்களுக்கும் தேவரீர் கருணையளித்தருளும். உமது ஆசீர்வாதத்தினால் அவர்கள் தேகத்திலும், மனத்திலும் பூரண சுகம் பெற்று உமது பரிசுத்த சபை முன் உமக்கு நன்றியறிதலுள்ள துதிகளைக் கூற, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலம் கிருபை செய்தருளும். ஆமென்.

சனசமுதாய தீமைகள் நீங்கும்படியாக

கடவுளே உமது தயவுள்ள சித்தத்தினால் தேசத்தின் பிரசைகளாகப் பிறந்திருக்கிற நாங்கள், எங்கள் தேசத்தை வார்த்தையினால் மாத்திரமல்ல, செய்கையினாலும் உண்மையாய் நேசிக்க உதவி செய்தருளும்.

நாங்கள் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய கடமைகளையும், சனசமுதாயத்திற்காகச் செய்யவேண்டிய கடமைகளையும், மன வாஞ்சையாய் நிறைவேற்றச் செய்தருளும். மனுஷரைக் கெடுக்கிற சகல தீமைகளையும், அவர்களை அடி-

மைகளாக்கும் கெட்ட வழக்கங்களையும், சீவியத்தை அந்தகாரப்படுத்தும் அறியாமையையும் எதிர்த்துப் போர் செய்ய எங்களைப் பெலப்படுத்தியருளும்.

எங்கள் தேசம் அவருடைய இராச்சியமாய் மாறவும், ஜீவனைக் கொடுக்கும் அவரது ஆளுகை எங்கள் மேலிருக்கவும் இயேசு கிறிஸ்துவினுள்ள ஒளி, அன்பு, வல்லமை ஆதியன எங்கள் சபையில் வெளிப்படவும், எங்கும் பரம்பவும் செய்தருளும்.

அவருடைய நாமத்தில், அவருடைய மகிமைக்காக இவைகளைத் தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

மழைக்காக

பரமபிதாவாகிய கடவுளே, உம்முடைய இராச்சியத்தையும் அதன் நீதியையும் தேடுகிற யாவருக்கும், சரீரத்தை ஆதரிக்க வேண்டிய வைகளெல்லாவற்றையும் ஈவேனென்று உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் கொண்டு வாக்குத் தத்தம் கொடுத்தீரே; எங்களுக்கு ஆறுதலும தேவரீருக்கு மகிமையு முண்டாகப் பூமியின் பலன்களை எங்களுக்குக் கிடைக்கும்படி, இப்பொழுது எங்களுக்கு உண்டாயிருக்கிற அவசியத்துக்குத் தகுதியான மழையை வருஷிக்கச் செய்ய வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

பஞ்சம் நீங்க

எங்கள் பரமபிதாவாகிய கடவுளே, மழை பெய்து பூமி தன் பலனைத் தந்து, மிருகங்கள்

மச்சங்கள் பல்கிவர அருளிச் செய்கிறீர். உமது சனத்தின் உபத்திரவங்களை நோக்கிப் பார்த்து எங்கள் அக்கிரமத்தின் நிமித்தம் நியாயமாய் வந்த பஞ்சத்தை, உமது தயையினாலேயகற்றி, தானியம் பெருகி மலியும்படி செய்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும், உமக்கும், பரிசுத்த ஆவிக்கும் சகல கனமும், மகிமையும், இப்பொழுதும், எப்பொழுதும் உண்டாகக் கடவன. ஆமென்.

விசேஷ ஸ்தோத்திரங்கள்.

பிள்ளையை அருளினதற்காக

(ஞானஸ்நான ஆராதனையிலாவது வேறு தருணங்களிலாவது உபயோகிப்பது)

வானத்திலும் பூமியிலுமுள்ள சகல குடும்பங்களுக்கும் நாமகாரணராகிய பரமபிதாவே, இந்தக் குழந்தையை இவர்களுக்கு அநுக்கிரகித்ததற்காக உமது அடியாராகிய இவர்களுடன் நாங்களும் உம்மைத் தாழ்மையாய்த் துதிக்கிறோம். இப்பிள்ளையின் தாய்க்குச் சுகத்தையும் பெலத்தையும் கொடுத்துப் பாதுகாத்தருளும். இந்தப்பிள்ளை தேகத்திலும் மனதிலும் பெலன் பெற்று வளர்ந்து, பெற்றோருக்கு அன்பின் ஊழியம் செய்து, இந்தச் சீவியத்தில் தேவரீரை உண்மையாய்ச் சேவிக்கவும், கடைசியாக உம்முடைய நித்திய வீட்டைச் சேரவும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

மழைபெய்ததற்காக

எங்கள் பரமபிதாவாகிய கடவுளே, மனுஷருக்குத் தேவையான பலனுண்டாகும்படி உம்முடைய தயையுள்ள விசாரணையினாலே முன்மாரியையும் பின்மாரியையும் பூமியின்மேல் பொழிந்தருளுகிறீர். எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவரீர் செய்த இரக்கங்களைக் கொண்டு, உம்முடைய அபாத்திர ஊழியக்காரரான எங்களுக்கு மிகுந்த ஆறுதலும், உமது பரிசுத்த நாமத்துக்கு மகிமையும் உண்டாகத் தக்கதாக, எங்களுக்குண்டான அவசியத்தில் தேவரீர் அநுகூலமான மழையை வறண்டுபோன உமது சுதந்தரத்தின்மேல் பொழிந்து, அதைக் குளிரப்பண்ணினதினிமித்தம், நாங்கள் உமக்குத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

பஞ்சம் நீங்கினதற்காக

மகா இரக்கமுள்ள பிதாவே, கிருபையுள்ள தயையினாலே உமது திருச் சபையாருடைய வணக்கமான விண்ணப்பங்களைக் கேட்டு, எங்களுக்குண்டாயிருந்த பஞ்சத்தையும் குறைவையும் நீக்கி, பலிவையும் செழிப்பையும் அருளிச் செய்திருக்கிறீர்; தேவரீர் செய்த இந்த விசேஷ உபகாரத்தினிமித்தம் தாழ்மையாக நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமக்கு மகிமையாகவும் எங்களுக்கு ஆறுதலாகவும் பூமி எங்களுக்கு விருத்தியாகப் பலனைத் தரும்படி, இன்னமும் தேவரீர் அன்புடன் தயைசெய்து வரவேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

அறுப்புக்கால ஸ்தோத்திரம்

சர்வ வல்லமையுள்ள கடவுளே! சகல சிருட்டிக்கும் பிதாவுமானவரே!

மனுக்குலத்தாருக்கு விதைப்பையும் அறுப்பையும் கட்டளையிட்டு, ஏககாலத்தில் பூமியின் பலனைக் கொடுத்ததற்காக மனப்பூர்வமாய் நன்றி கூறுகிறோம். இவைகளுக்காகவும் மற்றச் சகல நன்மைகளுக்காகவும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் உமது நாமத்தைத் துதித்துப் புகழுகிறோம். ஆமென்.

The Ministration of Baptism to Infants

குழந்தைகளுக்குக் கொடுக்கும்

ஞானஸ்நான முறைமை

கூடுமானால் பெற்றாரிருவரும் சமுகமாய் நிற்க வேண்டும்.

பெற்றார் தங்கள் குழந்தையுடன் குருவானவர் முன் வந்து நிற்க அவர் சபையாரைப் பார்த்துச் சொல்ல வேண்டியது:

பிரியமானவர்களே, சகல சாதிகளையுஞ் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சபைக்குக் கட்டளை கொடுக்கிறார். இங்கே சமுகமாய் நிற்பவர்கள் இந்தக் குழந்தையைக் கொண்டுவந்து அதைப் பரிசுத்த ஞானஸ்நானத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் நாமத்திலே, அவருடைய கட்டளைக் கமைந்து கூடிவந்திருக்கிறவர்களாகிய நமக்குப் படிப்பனையும் தைரியமும் உண்டாகத்தக்கதாக அவருடைய பரிசுத்த வாக்கின் போதனையைக் கேட்போமாக.

மத். 28: 18-20.

இயேசு தமது சீஷர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல சாதிகளையும் சீஷராக்குங்கள்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானங் கொ

டுங்கள்; நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும், அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசியுங்கள். இதோ யுக முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்.

மாற். 10: 13-16.

சிறு பிள்ளைகளை (இயேசுவானவர்) தொடும்படி அவரிடங் கொண்டுவந்தார்கள். கொண்டுவந்தவர்களைச் சீஷர் அதட்டினார்கள். இயேசுவோ அதைக்கண்டு விசனப்பட்டு: சிறுபிள்ளைகள் என்னிடம் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், கடவுளின் ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. சிறுபிள்ளையைப்போல் கடவுளின் ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாதவன் எவனும் அதிற் பிரவேசிக்கவே மாட்டானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

ஆதி. 17: 7.

உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் கடவுளாயிருக்கும்படி, எனக்கும் உனக்கும் உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேனென்று கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்கு அருளினார்.

எசா. 44: 3.

உன் சந்ததியின்மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.

யோவா. 3: 5.

இயேசு: ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுளின் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாதென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

பிரியமானவர்களே, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சகல சாதிகளையுஞ் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திற்குள் ஞானஸ்நானங் கொடுக்கும்படி தமது சீஷரையனுப்பினாரென்றும், அவர் தம்மிடத்தில் பிள்ளைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார் என்றும், அவர்களைத் தம்மிடத்தில் வர விடாதவர்களைக் கடிந்துகொண்டாரென்றும் அவருடைய வாக்குகளினாலே கேட்டறிந்திருக்கிறீர்களே.

அவர் அவர்களை அணைத்துக்கொண்டு அவர்கள்மேற் கைகளை வைத்து ஆசீர்வதித்தார் என்கின்ற வெளிப்படையான செய்கையினாலே, தாம் அவர்களில் பிரியமுள்ளவர் என்று காண்பித்ததையும் அறிந்திருக்கிறீர்கள். அப்படியே அவர் இந்தக் குழந்தையை அன்பாய் ஏற்றுக்கொண்டு, தமது இரக்கம் என்னுங் கைகளினால் இவனை (ளை) அணைத்து இவனை (ளை) த் தமது பரம ராஜ்யத்திற்குப் பங்காளியாக்கும்படி இவனு (ளு) க்குப் பரிசுத்த ஆவியை ஈந்தருளுவாரென்று சந்தேகம் இன்றி விசுவாசிப்பீர்களாக.

சகல மனுஷரும் பாவச் சுபாவமுடையவர்களாய்ப் பிறந்திருக்கிறதினாலும் ஆவியின் அனுக்கிரகம் வேண்டியிருப்பதினாலும் இந்தக் குழந்தை சலத்தினால் மாத்திரமல்ல ஆவியினாலும் ஸ்நானிக்கப்பட்டுக் கிறிஸ்துவின் சபையில் சீவனுள்ள அங்கத்தவனாய் (ளாய்) இருக்கும்படி வேண்டிக் கொள்வோமாக.

சேபம் செய்வோமாக

சருவ வல்லமையுள்ள நித்திய கடவுளே, பரம பிதாவே, உமது கிருபையையறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்ததற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகப்பண்ணி, இந்த விசுவாசத்தைப் பெலப்படுத்தியருளும். இந்தக் குழந்தை மறுபடியும் பிறந்து நித்திய இரட்சிப்புக்குச் சுதந்தரவாளியாகும்படி இவனு (ளு) க்கு உமது பரிசுத்த ஆவியைக் கொடுத்தருள வேண்டும் என்று இப்பொழுதும் எப்பொழுதும், உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் சீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

இரக்கமுள்ள கடவுளே, பரமபிதாவே, இந்தக் குழந்தையின் பெற்றோர், தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும், உமது பரிசுத்த வார்த்தையைப் பற்றும் விசுவாசத்திலும் வளர்க்கத்தக்க ஞானத்தையும், கிருபையையும் அடையும்படி, அவர்களுக்கு உமது பரிசுத்த ஆவியை அனுக்கிரகித்தருளுமென்று நமது ஓரே மத்தியஸ்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

கிருபையுள்ள பிதாவே, உமது பிரிய குமாரனாகிய இயேசு கிறிஸ்து யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெறும்படி செய்ததினால், இந்தப் பரிசுத்த நியமத்திற்குச் சலத்தைப் பிரயோகித்தல் தகுதியெனக் காண்பித்தீரே; ஆதலால் இந்தப் பிள்ளை கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டு, விசுவாசத்தில் நிலைகொண்டிருந்து, மோட்ச நம்பிக்கையால் களிகூர்ந்து, அன்பில் வேரூன்றி

சஞ்சலம் நிறைந்த இப் பிரபஞ்சத் திரைகளைக் கடந்து, கடைசியிலே நித்திய சீவ கரையைச் சேர்ந்து அங்கே உம்மோடே என்றைக்கும் ஆளும்பொருட்டு, உமது அளவில்லாத இரக்கத்தின்நிமித்தம் இவன் (ள்) மேற் கிருபை கூர்ந்து, இவனை (ளை) க் கழுவி, உமது பரிசுத்த ஆவியினாற் சுத்திகரிக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக, நாங்கள் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

குருவானவர் குழந்தையின் பெற்றோரைப் பார்த்துச்

சொல்லவேண்டியது:

பிரியமானவர்களே! நமது பரம பிதாவாகிய கடவுள் இந்தக் குழந்தையை உங்கள் வசத்தில் ஒப்புவித்திருக்கிறதினால் இவனு (ளு) டைய இகபர நன்மைக்கு உங்களை உத்தரவாதிகளாக நியமித்திருக்கிறார். ஞானஸ்நானத்தின் மூலமாய் நாங்கள் இவனை (ளை) த் திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்போகிறோம். ஆனால் இவன் (ள்) அடையப்போகிற இந்த மேலான நிலைமைக்குத் தகுந்தபடி இவனை (ளை) வளர்ப்பது உங்கள் கடமையாயிருக்கிறதென்று உங்களை எச்சரித்துப் புத்தி கூறுகின்றேன். இவ்விதமாக நீங்கள் ஏற்றுக்கொள்ளுங் கடமை எவ்வளவு காத்திரமானதென்று நன்றாய் அறிந்து அதைக் கடவுளுடைய ஒத்தாசையைக்கொண்டு நிறைவேற்றத் தீர்மானித்திருக்கிறீர்களாவென்று அறிய விரும்புகிறேன். ஆகையால் கடவுளுக்கு முன்பாகவும், இந்தச் சபைக்கு முன்பாகவும், இந்தக் குழந்தையைப்பற்றிப் பின்வருகிறபடி வாக்குக் கொடுக்க உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குரு:—இந்தக் குழந்தை கடவுளால் உங்களுக்கு அருளப்பட்டவன் (ள்) என்று நம்பி இவனை (ளை) அவருக்கே உரியவனா (ளா) கப் பாவித்து இவனை (ளை) கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கிறீர்களா?

பெற்றோர்:—அப்படியே ஒப்புக் கொடுக்கிறோம்.

குரு:—இந்தக் குழந்தையைக் கிறிஸ்து மார்க்கத்திற்குரிய போதனைகளிலும், கடமைகளிலும் வளர்ப்பீர்களா? தகுந்தவயதில் செபம் செய்யவும், வேதத்தை வாசிக்கவும் கற்றுக் கொடுப்பீர்களா? கடவுளாராதனையைக் கிரமமாய் அநுசரிக்கவும், ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவும் கற்பிப்பீர்களா?

பெற்றோர்:—அப்படியே செய்வோம்.

குரு:—துர்ப்போதனை, துர்ப்பழக்கம், துர்ச்சகவாசம், கேடுள்ள பிறசமயக் கொள்கைகள் முதலியவைகளிலிருந்து இவனை (ளை) உங்களால் கூடியவரையில் விலக்கிக் காத்துவருவீர்களா?

பெற்றோர்:—அப்படியே விலக்கிக் காத்து வருவோம்.

குரு:—நிலையற்ற இன்பத்தையல்ல, நிலையுள்ள இன்பத்தையே இவன் (ள்) பெறும்படியாக இவனி (ளி) ல் தோன்றும் துர்க்குணங்களை அகற்றி நற்குணங்களை வளரச் செய்யக் கடவுள் கிருபையை முன்னிட்டு இடைவிடாமல் பிரயாசப் படுவீர்களா?

பெற்றோர்:—அப்படியே பிரயாசப் படுவோம்.

குரு:—உங்கள் வார்த்தையினாலும், கிரியையினாலும் இவனு (ளு) க்குத் தீமையல்ல நன்மையே உண்டாகும்படி நன்மாதிரி காட்டி, உத்தம கிறிஸ்தவர்களாய் நடந்துவரப் பிரயாசப்படுவீர்களா?

பெற்றார்:—கடவுளுதவியைக்கொண்டு அப்படியே நடந்துவரப் பிரயாசப்படுவோம்.

இப்பொழுது சபையாரெல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் குழந்தையைப் பிதாவிடமிருந்து வாங்கி தமது கரங்களில் ஏந்திக்கொண்டு அதின்மேல் சலத்தைத் தெளித்து அதற்குப் பெயரிட்டுச்சொல்லவேண்டியது.

பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திற்குள் நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் ஆமென்.

நாம் இந்தக் குழந்தை கிறிஸ்துமார்க்கத்தின் போதனைகளிலும், சலாக்கியங்களிலும், கடமைகளிலும் போதிக்கப்பட்டு வளர்க்கப்படும்பொருட்டாக இவனை (ளை) கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் ஏற்றுக்கொள்ளுகிறோம். இவன் (ள்) தன் ஆயுள் பரியந்தம் கிறிஸ்தவ சீவியத்திலும், ஊழியத்திலும் உண்மையாய் நிலைத்திருக்கும்படி உதவி செய்வோமாக.

குருவானவர் மாதாவிடம் குழந்தையைக் கொடுத்த பிற்பாடு சபையார் நிற்கச் சொல்லவேண்டியது.:

இரக்கமுடைய கடவுளே, இந்தக் குழந்தையின் பரிசுத்த சீவனுண்டாகும் பொருட்டு இவனி (ளி) லுள்ள பாவ சுபாவம் நீங்கும்படி தயைசெய்தருளும். ஆமென்.

இவன் (ள்) சரீரத்தில் வளருவது போல ஞானத்திலும் பரம குணங்களிலும் வளர்ந்து கிறிஸ்துவுக்குள் தேறினவனா (ளா) கும்படி உமது பரிசுத்த ஆவியை இவனு (ளு) க்கு ஈந்தருளும். ஆமென்.

இவன் (ள்) பிசாசையும், உலகத்தையும் மாமிசத்தையும் ஜெயங்கொண்டு அவைகளின் மேல் வெற்றி சிறப்பதற்கேற்ற வல்லமையையும், திடத்தையும் அடையும்படிக்குத் தயை செய்தருளும். ஆமென்.

இந்தக் குழந்தையின் பெற்றார் இப்போது கடவுளுக்கு முன்பாகச் செய்த உடன்படிக்கையைக் கைக்கொண்டு நிறைவேற்றவும், தெய்வபக்தியான சீவியத்தை எப்பொழுதும் தங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய்க் காண்பிக்கவும், தங்கள் செபத்தினாலும், நடக்கையினாலும் இவனு (ளு) டைய நன்மைக்காகக் கடவுளின் ஊழியக்காரராயிருக்கவுங் கிருபை செய்தருளும். ஆமென்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உங்கள்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி, உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக் கடவர்.

வளர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படும்

ஞானஸ்நான முறைமை.

ஞானஸ்நானம் பெறப்போகிறவர்கள் குருவானவர்முன் வந்து நிற்க அவர் சொல்ல வேண்டியது

செபம் செய்யக் கடவோம்.

சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே, ஒன்றான மெய்க் கடவுளாகிய உம்மையே நாங்கள் ஆராதித்து வணங்குகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் உம்மை மனிதருக்கு வெளிப்படுத்தவும், அவருடைய மரணத்தினால் அவர்களைப் பாவத்தினின்று மீட்டு இரட்சிக்கவும், உமக்கு மகிமை உண்டாக உலகத்திலிருந்து ஒரு சபையைச் சேர்க்கவும் நீர் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். எங்களுக்கும் இந்த இரட்சிப்பைத் தெரிவித்து இவ்விடத்தில் உமது சபையை ஸ்தாபித்திருப்பதற்காக உம்மைத் துதிக்கிறோம். நீர் கிருபை கூர்ந்து உமது சனங்களாகிய எங்கள் மத்தியில் என்றைக்கும் வாசஞ் செய்து, உமது மகத்துவமான வல்லமையினால் புறமதஸ்தர் யாவரையும் உம்மிடம் திருப்பி அருள வேண்டுமென்று உம்மை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம். இவ்விதமாய் உம்முடைய நாமம் பரிசுத்தப்படவும, உம்முடைய இராச்சியம் வரவும், உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூலோகத்திலும் செய்யப்படவும் கிருபை செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்தவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

பின்பு குருவானவர் சபையாரைப் பார்த்துச் சொல்லவேண்டியது.

பிரியமானவர்களே, சகல சாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்திற்குள் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தமது சபைக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். இங்கே நிற்பவர் (கள்) கடவுளேற்படுத்திய நியமத்தின் வழியாக இப்பொழுது இந்தச் சபையார் சமுகத்தில் கிறிஸ்துவின் சபையில் சேர்த்துக்கொள்ளப்படும்படி விரும்பி வந்திருக்கிறார் (கள்). ஆகையால் கிறிஸ்துவின் நாமத்திலே அவருடைய கட்டளைக்கு அமைந்து கூடிவந்திருக்கிறவர்களாகிய நமக்குப் படிப்பனையும் தைரியமும் உண்டாகத்தக்கதாக இந்தப் பரிசுத்த நியமத்தைக் குறித்து வேத வாக்கியங்கள் சொல்வதைக் கேட்போமாக.

இப்பொழுது குருவானவர் பின்வருகிற வாக்கியங்களில் சிலவாக்கியங்களை வாசிக்கவேண்டும்.

மத். 28: 18-20. – அப்பொழுது இயேசு கிட்ட வந்து அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல சாதிகளையும் சீஷராக்குங்கள். பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்துக்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்; நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசியுங்கள். இதோ யுகமுடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

யோ. 3: 5-8. அதைக் கேட்ட இயேசு: ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுளின் ராஜயத்திற்குள் பிரவேசிக்க முடி

யாதென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சம், ஆவியினால் பிறப்பது ஆவி. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உங்களுக்குச் சொன்னதைப்பற்றி அதிசயப்படவேண்டாம். காற்று, தனக்கு இஷ்டமான திசையில் வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆகிலும் அது எங்கிருந்து வருகிறதென்றும், எங்கே போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்த எவனும் அப்படியே என்றார்.

தீத்து. 3: 1-5. நாம் செய்த நீதியின்கிரியைகளைப் பார்த்தல்ல தமது இரக்கத்தின்படியே மறுஜனன முழுக்கினாலும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

ரோம. 6: 3-4. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோமென்று அறியீர்களா? ஆகவே, பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி ஞானஸ்நானத்தின் மூலமாய் அவரோடு மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்பட்டோம்.

அப். 2: 38. பேதுரு அவர்களிடம் நீங்கள் மனந்திரும்பி உங்கள் பாவ மன்னிப்புக்கென்று ஒவ்வொருவரும் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தின் மேல் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

அப். 22: 16. இப்பொழுது நீ தாமதிப்பானேன்? எழுந்து அவர் நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் நீங்கக் கழுவப்படு என்றான்.

அப். 10: 47-48. அப்பொழுது பேதுரு: நம்மைப்போல் பரிசுத்தஆவியைப்பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடி எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி இயேசுகிறிஸ்துவின நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

கொலோ 2: 12. ஞானஸ்நானத்தில் அவரோடு அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள்; அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின கடவுளின் வல்லமையைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் அந்த ஞானஸ்நானத்தில் அவரோடு எழுப்பப்பட்டும் இருக்கிறீர்கள்.

சருவானவர் ஞானஸ்நானம்பெற வந்திருக்கிறவர் [illegible]த்தில் பின்வரும் கேள்விகளைக் கேட்கவேண்டும்.

வினா.—ஒரே மெய்க்கடவுள் உண்டென்று நம்புகிறீரா?

விடை.—அப்படியே நம்புகிறேன்.

வினா.—கடவுள் பரிசுத்தர் என்றும் அவர் சகல பாவத்தையும் வெறுத்துத் தண்டிக்கிறவரென்றும் நம்புகிறீரா?

விடை.—அப்படியே நம்புகிறேன்.

வினா.—கடவுள் உதவியைக்கொண்டு சகலபாவங்களையும் வெறுத்து விடுகிறீரா?

விடை.—அப்படியே விடுகிறேன்.

வினா.—ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையே உமது இரட்சகராக ஏற்றுக்கொண்டு உமது இரட்சிப்பைப் பெற அவரில் மாத்திரம் நம்பிக்கை வைக்கிறீரா?

விடை.—ஆம் அப்படியே செய்கிறேன்.

வினா—நீர் கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்க உமக்கு அனுக்கிரகம் வேண்டுமென்று நம்புகிறீரா?

விடை.—ஆம் அப்படியே நம்புகிறேன்.

வினா.—தமது மரணத்தால் பாவ நிவிர்த்தி செய்த இயேசுகிறிஸ்து ஒருவரே பாவமற உம்மை இரட்சிக்கக் கூடியவரென்று விசுவாசிக்கிறீரா?

விடை.—அப்படியே விசுவாசித்து இந்த இரட்சிப்பைத் தேடுகிறேன்.

வினா.—இந்த விசுவாசத்தில் நீர் ஞானஸ்நானம் பெற விரும்புகிறீரா?

விடை.—அதையே விரும்புகிறேன்.

வினா—நீர் கடவுளுடைய திருவுள்ளத்திற்கும் கட்டளைகளுக்கும் அமைந்து உமது வாழ்நாள் எல்லாம் அவைகளின்படியே நடந்து கொள்வீரா?

விடை.—கடவுள் ஒத்தாசையினால் அப்படியே நடந்து கொள்வேன்.

இவ்விடத்தில் சாவகாசமிருந்தால் ஞானஸ்நானம் பெறுபவர்கள் சாட்சி கொடுக்கலாம்.

செபம் செய்யக் கடவோம்.

சர்வ வல்லமையுள்ள கடவுளே, சகல கிருபைக்கும் காரணரே, உமக்கு முன்பாக இங்கே வந்திருக்கிற இவரு(ர்களு)க்கு உம்முடைய பரிசுத்தாவியைக் கொடுத்து உமது சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி இவர் (கள்) கண்களைத் திறந்ததற்காகவும், உமது திருவடியைத் தேடிச் சேரும்படி இவர்(கள்) இருதயத்தை ஏவினதற்

காகவும் உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். இவர் (கள்) தன் (தங்கள்) வாயினால் உம்மை அறிக்கை செய்வதுமல்லாமல் தன் (தங்கள்) இருதயத்திலும் உம்மை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ள, கிருபை செய்ய வேண்டுமென்றும் உம்மைப் பிரார்த்திக்கிறோம். இந்த ஞானஸ்நானத்தில் உபயோகிக்கிற சலத்தை இவர் (கள்) இருதயத்தில் பரிசுத்தாவியினால் உண்டாகிற சுத்திகரிப்புக்கு உண்மையான அடையாளமாயிருக்கச் செய்யும். இவர் (கள்) முன் கொண்டிருந்த துர் இச்சைகளின்படி இனி நடவாமல் இவரை (ர்களை) அழைத்தவர் பரிசுத்தராய் இருக்கிறது போல இவரு (ர்களு)ம் தன் (தங்கள்) நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்த(ர்களா)யிருப்பதற்கு, கிருபை செய்யவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்

சர்வ வல்லமையும் மிகுந்த கிருபையுமுள்ள நித்திய கடவுளே, பிரியமுள்ள உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்து எங்கள் பாவங்களை நீக்கும்பொருட்டுத் தமமுடைய மிகவும் அருமையான விலாவிலிருந்து இரத்தமும் நீருஞ் சிந்தி, தம்முடைய சீஷர் பேய்ச் சகல சாதிகளையும் சீஷராக்கி அவர்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்துக்குள் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டாரே. உமது சபை செய்கிற விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்து இப்பொழுது ஞானஸ்நானம் பெறப்போகிற இவர் (கள்) உம்முடைய கிருபையின் பரிபூரணத்தை அடையவும், என்றைக்கும் இவர்(ர்கள்) தெரிந்து கொள்ளப்பட்ட உம்முடைய உண்மையான பிள்ளைகளுக்குள் நிலைப்படவும் எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலமாக அனுக்கிரகித்தருளும். ஆமென்

சபையார் யாவரும் எழுந்து நிற்க, ஞானஸ்நானம் பெறப்போகிறவர்கள் ஒவ்வொருவராய்க் குருவானவர் முன் முழங்காற்படியிட்டிருக்க, அவர் ஒவ்வொருவருக்கும் பெயர் சொல்லி ஞானஸ்நானங்கொடுத்துச்சொல்லவேண்டியது.

பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திற்குள் நான் உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

நாம் இவரை (இவர்களை)க் கிறிஸ்துவின் சபையிற் சேர்த்துக் கொள்ளுகிறோம். இவர்(கள்) தனது (தங்கள்) ஆயுள் பரியந்தம் கிறிஸ்தவ சீவியத்திலும் ஊழியத்திலும் உண்மையாய் நிலைத்திருக்கும்படி உதவி செய்வோமாக.

இரக்கமுள்ள கடவுளே, இவரி (ர்களி)ல் பரிசுத்த சீவன் உண்டாகும் பொருட்டு இவரி (ர்களி)லுள்ள பாவச் சுபாவம் நீங்கும்படி [illegible] செய்தருளும். ஆமென்.

இவரி (ர்களி)லுள்ள சகல மாம்ச இச்சைகளும் மரிக்கவும் ஆவிக்குரியவைகளெல்லாம் சீவித்து வளரவும் அனுக்கிரகித்தருளும். ஆமென்.

துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, நித்திய சீவியாயிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற கடவுளே, எங்கள் உத்தியோகத்தின் மூலமாயும் ஊழியத்தினாலும் இவ்விடத்தில் உமக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிற இவர் (கள்) பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு நித்திய பலனை அடையும்படி கிருபை செய்தருளும். ஆமென்.

இரக்கமுள்ள பிதாவே, ஞானஸ்நானத்தின் மூலமாய் உம்முடைய திருச்சபையில் சேர்க்கப்பட்ட இவர் (கள்) இதுமுதல் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ், பாவத்தோடும், உலகத்தோடும், பிசாசோடும் தைரியமாய்ப் போர் செய்து மரண

31790

பரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள போர்ச் சேவகரு (ர்களு) ம் ஊழியக்காரனு (ர்களு) மாய் நிலைத்திருக்கும்படி கிருபை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். ஆமென்.

பின்பு குருவானவர் ஞானஸ்நானம் பெற்றவரை (ர்களை)ப் பார்த்துச் சொல்லவேண்டியது.

பிரியமான சகோதரனே (ரியே) நீர் (ங்கள்) இப்பொழுது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர் (கள்). ஞானஸ்நானமானது நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காட்டியமுன்மாதிரியை நாம் பின்பற்றி அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தது போல, ஞானஸ்நானம்பெற்ற நாமும் பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறோமென்றும், தீமையும் கேடுமுள்ள நமது இச்சைகள் எல்லாவற்றையும் இடைவிடாது அழித்து, சகல சன்மார்க்கத்திலும் தெய்வபக்தியான சீவியத்திலும் நாள்தோறும் நடப்பதினால் அவருக்கு ஒப்பாய் வருவதாகிய நமது மார்க்க அனுசாரத்தை நமக்குக் காட்டுகிறதென்றும் எப்பொழுதும் நினைவுகூர்ந்து, நீர் (ங்கள்) ஒளியின் பிள்ளைகளுக்கேற்ற, அவபக்தியுள்ள இவ்வுலகத்தின் மத்தியில், குற்றமற்றவரு (ர்களு) ம் மாசற்றவரு (ர்களு) மாய் மேன்மையும் பரிசுத்தமுமான உமது (உங்கள்) அழைப்புக்கு உத்தரவாதம் செய்யவேண்டியவரா (ர்களா) க நடப்பது, உமது (உங்கள்) பங்கும் கடமையுமென்பதை உமது (உங்கள்) மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உம (உங்களு) க்குப் புத்திசொல்லுகிறேன்.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையும் கடவுளுடைய அன்பும் பரிசுத்தாவியின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.